# மாலை தீப்பொறி

MALAE THEEPORI

2026 மே 1–15 தொகுதி 24 இதழ் 18

விலை ரூ.10 ஆண்டு சந்தா ரூ.200






# தேர்தல் பரப்புரையில் மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட் கட்சி












மாலெ தீப்பொறி

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி
(மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்)

தமிழ்நாடு மாநிலக் குழுவின்
அரசியல் ஏடு

இருவார இதழ்
2026 மே 1-15
தொகுதி 24 இதழ் 18

முதன்மை ஆசிரியர்
சங்கர் .வீ

ஆசிரியர்
ஜி. ரமேஷ்

ஆசிரியர்குழு
பழ. ஆசைத்தம்பி
பாலசுந்தரம்
அ. சந்திரமோகன்
கே. ஜி. தேசிகன்

மேலாளர்
சொ. இரணியப்பன்

1/10, 11ஆவது தெரு,
கருணாநிதி நகர்,
அயனாவரம், சென்னை - 23

நிர்வாக அலுவலகம்
3/254 பி, ஜீவா தெரு,
வண்டலூர்
சென்னை - 600048

தொலைபேசி: 9443507067
9840340741

www.tamilnadu.cpiml.net
malaetheepori@gmail.com
cpimlthamilnadu.blogspot.com

# காத்திருக்கும் பேரபாயங்களும் கலகங்களும்!

தமிழ்நாடு உட்பட ஐந்து மாநிலங்கள் மற்றும் ஒன்றிய பிரதேசங்களில் வாக்குப் பதிவு முடிந்து, வாக்கு எண்ணிக்கைக்காக காத்துக் கொண்டிருக்கும் வேளையில், பாஜக மோடி அரசு தன்னுடைய பாசிச திட்டங்களை அமல்படுத்துவதில் தீவிரம் காட்டி வருகிறது. உலகிலேயே மிகப் பெரிய பொதுத் துறையான இந்திய இரயில்வேயில் 2 சதவீத ஊழியர்களை அதாவது 14 லட்சத்து 80 பணியிடங்களில் சுமார் 30 ஆயிரம் ஊழியர்களை வீட்டுக்கு அனுப்ப முடிவு செய்து இந்திய இரயில்வே வாரியம் அனைத்து மண்டலங்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பியுள்ளது. ஒவ்வொரு நிதி ஆண்டும் இரயில்வேயில் உள்ள பணியிடங்களை ஒழித்துக் கட்டிக் கொண்டிருக்கிறது மோடி அரசு. கடந்த 2024–25ம் ஆண்டில் மட்டும் சுமார் 28 ஆயிரத்து 800 பணிடங்கள் ஒழிக்கப்பட்டன. ஆண்டிற்கு 2 கோடி பேருக்கு வேலை தருவதாகச் சொல்லி ஆட்சிக்கு வந்த மோடி அரசு, இப்போது ஒவ்வொரு ஆண்டும் இருக்கின்ற வேலையைப் பறிக்கின்ற வேலையைத்தான் செய்து கொண்டிருக்கிறது. மோடி அரசு, ஏற்கனவே விமானப் போக்குவரத்தை முற்றிலுமாக தனியாரிடம் ஒப்படைத்துவிட்டது. இயில்வேயையும் கொஞ்சம் கொஞ்சமாக தனியாரிடம் கொடுத்துக் கொண்டிருக்கிறது. உணவு தயாரிப்பு, பரிமாற்றம் முதல் தூய்மைப் பணி, பராமரிப்பு என ஒவ்வொன்றாக தனியார் ஒப்பந்ததாரர்களிடம் கொடுத்துவிட்டது. இரயில்வேயில் உள்ள நிரந்தரத் தொழிலாளர்களை படிப்படியாக வீட்டுக்கு அனுப்பிவிட்டு, ஒட்டு மொத்தமாக தனியாரிடம் ஒப்படைக்கும் திட்டம்தான் இந்த ஆள் குறைப்பு நடவடிக்கை. பல மாநிலங்களில் தேர்தல்கள் நடக்கும் போதே கொஞ்சமும் பதறாமல் தொழிலாளர் விரோத, மக்கள் விரோத கொள்கைத் திட்டங்களை அமல்படுத்திக் கொண்டிருக்கிறது மோடி அரசு. நீதித் துறை உட்பட எல்லா துறைகளும் தம் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதால் நாங்கள் நினைத்தால் எதை வேண்டுமானாலும் செய்வோம் என்கிறது பாசிச மோடி அரசு. அதற்கேற்பவே இந்திய உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியும் கூட இருக்கிறார். தொழிற்சங்கங்களால்தான் வேலைகள் பறி போகின்றன என்றும் தொழிற்சங்கங்கள்தான் போராட்டங்களைத் தூண்டி விடுகின்றன என்றும் கருத்து தெரிவித்துக் கொண்டிருக்கிறார். ஆனால், நோய்டாவில் நடக்கும் தொழிலாளர் போராட்டங்கள் எந்தவொரு தொழிற்சங்கத்தின் தலைமையின்றி தன்னெழுச்சியாக நடைபெறுகின்றன. மோடி அரசின் நான்கு தொழிலாளர் சட்டத் தொகுப்புகளும் ஆட்குறைப்பும் வேலை நேர நீட்டிப்பும் விலைவாசி உயர்வும்தான் அந்தத் தொழிலாளர்களின் போராட்டத்தைத் தலைமைதாங்கிக் கொண்டிருக்கின்றன. இன்னொருபுறம் பன்முகக் கலாச்சாரம் கொண்ட இந்தியாவை ஒற்றை கலாச்சாரத்திற்குள் கொண்டு வருவதற்கு அமைச்சர், ஆளுநர், நீதிபதி என பரப்புரை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆர்.என்.ரவி போய் அவ்விடத்திற்கு வந்துள்ள ஆர்வி.அர்லேகர், சென்னையில் ஒரு விழாவில் பேசும் போது நமது நாடு பல்வேறு கலாச்சாரங்கள் கொண்டதல்ல. நாம் வெவ்வேறு கலாச்சாரங்களைக் கொண்ட மக்கள் அல்ல, வட இந்தியாவிலிருந்து தென்னிந்தியா வரை ஒரே கலாச்சாரம்தான் என்று பேசுகிறார். மத்தியப் பிரதேசம் போபால் சட்டப் பல்கலைக் கழகத்தின் விழாவில் பேசிய சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி, தங்களின் பண்பாடு மற்றும் சிந்தனை வேர்களில் இருந்து முற்றிலும் விலகிவிட்டனர். அவர்களை பண்பாட்டு வேர்களுடன் இணைக்க தேசிய சட்டப் பல்கலைக் கழகங்களில், மநுஸ்மிருதி, அர்த்தசாஸ்திரம் கட்டாயமாகப் படிக்கச் செய்ய வேண்டும் என்று பேசியிருக்கிறார். ஆளுநரும் நீதிபதியும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் படி பதவி ஏற்றவர்கள். ஆனால், அவர்கள் தங்களின் உறுதியேற்புக்கெதிராக, இந்திய அரசிலமைப்புச் சட்டத்திற்கு எதிராக பேசுகிறார்கள். பரப்புரை செய்கிறார்கள். பாசிச பாஜகவின் இந்து நாடு, இந்துத்துவம், இந்தி மொழி கொள்கையைத் திட்டமிட்டு பரப்பி வருகிறார்கள். புதுச்சேரி மாநிலத்தில் உள்ள காபந்து அரசாங்கம் பிரெஞ்சு மொழியை நீக்கி விட்டு இந்தியை அல்லது சமஸ்கிருதத்தைப் படிக்கச் சொல்லி பாடத் திட்டத்தை மாற்றுகிறது. காத்திருக்கும் இந்த பாசிசப் பேரபாயங்களில் இருந்து மக்கள் தங்கள் உரிமைகளையும் உடமைகளையும் காக்க கலகங்களில் ஈடுபடுவது தவிர்க்க முடியாதது. அதேவேளை அதை அரசியலற்ற போக்கில் அல்லாமல் சரியான திசைவழியில் கொண்டு செல்லும் கடமையும் பொறுப்பும் இடதுசாரி, ஜனநாயக, முற்போக்கு சக்திகளின் கைகளில் இருக்கிறது.

# ஏப்ரல் 22, 2026 இறைகூவல்!

நமது அன்பிற்குரிய கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்)-ன் 57 வது துவக்க நாளை, உண்மையிலேயே கொந்தளிப்பானதொரு உலகச் சூழலில் கடைப்பிடிக்கிறோம். ஈரான் மீதான அமெரிக்க - இஸ்ரேல் போர் இரண்டாவது திங்களை எட்டியுள்ள நிலையில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உலக மேலாதிக்கத்திற்கு உண்மையிலேயே மிகப் பெரியதொரு அடியாக மாறியுள்ளது. உயர்மட்டத் தலைவர்களோடு, பள்ளிக் குழந்தைகளையும் பொதுமக்களையும் குறிவைத்து கொடூரமாக தாக்கிக் கொன்று, ஈரானை வீழ்த்தி, ஒரு சில நாட்களிலேயே அங்கு எளிதாக ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வந்துவிடலாமென ட்ரம்ப்பும் நெதன்யாகுவும் நினைத்துக் கொண்டிருந்தனர். ஆனால், ஈரான் மாபெரும் தாங்குதிறனை காட்டியுள்ளதுடன் அமெரிக்க-இஸ்ரேல் தாக்குதலில் கொல்லப்பட்ட தலைவர்கள், அதிகாரிகளின் இடத்தில் புதிய தலைவர்களையும், அதிகாரிகளையும் வெகுவிரைவாகவே கொண்டுவந்து அவர்களிடம் பொறுப்புகளை ஒப்படைத்தது. இந்த மீள்திறனோடு கூடவே, அமெரிக்க-இஸ்ரேல் ராணுவ இலக்குகளைத் தாக்கி தொடர் சேதங்களை ஏற்படுத்துவதில் கணிசமான ராணுவ மதிநுட்பத்தையும் ஆற்றலையும் காட்டியிருக்கிறது. ஹோர்முஸ் நீரிணையை மிகவும் சக்திவாய்ந்த ஆயுதமாகவும் மாற்றிக் காட்டியுள்ளது.

இதன் விளைவு, ட்ரம்ப் நிர்வாகத்துக்கு எதிராக அமெரிக்காவிலேயே வெகுமக்களின் கோபம் வெடித்துப் பெருகி வருகிறது. அமெரிக்காவின் அய்ரோப்பிய கூட்டாளிகளும் கூட ட்ரம்ப் ஆட்சி நிர்வாகத்திடமிருந்து ஒதுங்கி இருக்கத் துவங்கியுள்ளன. பல நாடுகள், அமெரிக்காவின் போர்க் கூச்சலுக்கு ஒத்துழைப்புத்தர மறுத்து விட்டன. அமெரிக்கா ராணுவத் தளங்கள் அமைக்க இடமளித்துள்ள அரபு நாடுகளும் வளைகுடா நாடுகளில் இருந்து செயல்படும் உலகளாவிய பகாசுர தொழில்நுட்ப நிறுவனங்களும் அதிகரித்த அளவில் போரின் வெப்பத்தை உணரத் தொடங்கியுள்ளன.

போரை நடத்தும் அமெரிக்கா-இஸ்ரேலுடன் மோடி அரசாங்கம் கொண்டுள்ள நெருக்கம், பேரழிவுக் கூட்டின் காரணமாக இந்தியாவும்கூட அதிக விலையைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. ஏறக்குறைய ஒரு கோடி இந்தியத் தொழிலாளரும், தொழில் வல்லுநர்களும் நாடு கடந்து மேற்கு ஆசியாவில் பணிபுரிந்து வருகிறார்கள். அவர்கள் எல்லாரும் மிக மோசமான நிச்சயமற்ற, பாதுகாப்பற்ற நிலைமையில், பயத்தின் நிழலில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இந்தப் போர் இந்தியாவில் எரிபொருள், உரங்களுக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. பல பத்து லட்சம் புலம்பெயர் தொழிலாளருக்கு, பிழைக்க வழியின்றி முற்றிலும் சவாலாகிப் போன கோவிட் கால பொதுமுடக்கத்தின் நிலைமை திரும்பி வந்து விட்டது போலுள்ளது. ஆழமான பொருளாதார நெருக்கடியும், வெளிநாட்டுக் கொள்கையின் படுதோல்வியும் சேர்ந்து இந்தியாவில் நமது போராட்டங்களுக்கான புதிய நிலைமையை குறிப்பிட்டுக் காட்டுகிறது; அதற்கேற்ப நாம் துணிச்சலுடன் ஏகாதிபத்திய எதிர்ப்பு, பாசிச எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

நாம், நமது கட்சியின் 57 வது ஆண்டினை கடைப்பிடித்துக் கொண்டிருக்கும்போது, இந்திய மக்கள் மத்தியில் அமைதியின்மைக்கான புதிய அறிகுறிகளைக் காண முடிகிறது. இந்திய அரசமைப்புச் சட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டதிலிருந்து, பல தலைமுறை இந்தியர்கள் அனுபவித்து வந்த மிக முக்கியமான அடிப்படை ஜனநாயக உரிமையான வாக்குரிமைக்காக, இந்தியா முழுவதிலுமுள்ள கோடிக்கணக்கான மக்கள், தங்கள் வாக்குகளை செலுத்துவதற்காகப் போராட வேண்டியிருக்கிறது. புதிய தொழிலாளர் சட்டத் தொகுப்புக்கு எதிராக, அதிலும் குறிப்பாக வேலை நேரத்தை அதிகரித்துள்ளதற்கு எதிராக தொழிலாளர் மத்தியில் எதிர்ப்புகள் வெடித்துக் கிளம்புகின்றன. அமெரிக்காவுடன் ஏற்படுத்திக் கொண்டுள்ள வர்த்தக ஒப்பந்தம் இந்திய விவசாயத்துக்கு பேரழிவை ஏற்படுத்த உள்ளது; இந்திய விவசாயத்தை ஏகாதிபத்திய அபகரிப்பிலிருந்து பாதுகாக்க தீர்மானகரமான போராட்டம் நடத்த விவசாயிகள் தயாராகி வருகின்றனர். மகாதேஊவேஉச ஒழித்துக் கட்டப்படுவதை அடுத்து, ஊரக வேலைவாய்ப்பு உறுதி பிரச்சினை புதிய வகையில் கவனத்தை ஈர்த்து வருகிறது. பல்கலைக்கழக மானியக் குழுவின் விதிமுறைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதானது பொருளுள்ள சமூக நீதிக்கான வேட்கையை தூண்டி விட்டுள்ளது.

2026-27 ஆண்டு, இந்திய சாதி எதிர்ப்பு இயக்க வரலாற்றில் முக்கிய நிகழ்வுகளை எதிர்கொள்கிறது; அவை நூற்றாண்டு காணும் இரண்டு முக்கிய நிகழ்வுகள். மகத் அறப்போராட்டம் (20 மார்ச் 1927), மனுநீதி எரிப்பு போராட்டம் (25 டிசம்பர் 1927); அதோடு கூடவே சமூக சமத்துவம், அடிமைத்தனத்திலிருந்து விடுதலை வேட்கையின் மாபெரும் முன்னோடியான ஜோதிபா பூலேவின்

இருநூறாவது ஆண்டும் வரவிருக்கிறது.

மாபெரும் நக்சல்பாரி விவசாயிகள் எழுச்சியில் உதித்தெழுந்த கட்சி இகக(மாலெ). இகக(மாலெ), ஒட்டுமொத்த கம்யூனிச இயக்கத்தின் புரட்சிகர மரபுகளையும் பெருமையுடன் வரித்துக்கொண்ட கட்சி; எல்லாவித பாதகமான நிலைமைகளுக்கு மத்தியிலும் மக்களது வலிமை, துணிச்சல், முன் முயற்சியில் ஊட்டம் பெற்று தொடர்ந்து தன்னை புதுப்பித்துக் கொண்டு வருகிற கட்சி. உலகம் முழுவதுமுள்ள ஆளும் வர்க்கத்தினர், அவ்வப்பொழுது கம்யூனிஸ்ட் இயக்கம் தோற்றுவிட்டதாக இரங்கலுரை எழுதிக் கொண்டிருந்தாலும் அத்தகைய வெற்(றி)று அறிவிப்புகளையெல்லாம் தூக்கியெறிந்து கம்யூனிச இயக்கம் மீண்டெழுந்து வருகிறது.

இன்று ஏகாதிபத்தியத்தின் ஆசியுடன் இந்திய பாசிச ஆட்சியாளர்கள் உண்மையை மறைத்து, கம்யூனிஸ்ட்கள் மீது அவதூறைப் பரப்பி நம் நாட்டிற்கும் மக்களுக்கும் துரோகமிழைத்து வரும் வேளையில், இகக(மாலெ) கம்யூனிஸ்ட் பதாகையை உயர்த்திப் பிடித்து உண்மையான இறையாளுமை கொண்ட, மதச்சார்பற்ற சோசலிச ஜனநாயக குடியரசுக்கான போராட்டத்தைத் தலைமையேற்று நடத்திட வேண்டும். நமது மாபெரும் தியாகிகளின் கனவுகளை நிறைவேற்றிடவும் நமது மாபெரும் மக்களின் நலன்களுக்காகப் பணியாற்றவும் இகக(மாலெ)வை சாத்தியமான அனைத்து வழியிலும் விரிவுபடுத்துவோம்; வலுப்படுத்துவோம்.

**மத்தியக் கமிட்டி,**

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்)**

## மே நாள் அறைகூவல் – 2026

## தொழிலாளர் வர்க்கத்தின் அறைகூவல்

# மோடியின் கார்ப்பரேட் ஆதரவு தொழிலாளர் விரோத சட்டத் தொகுப்புகளை ரத்து செய்!

# அனைவருக்கும் மாதம் ரூ. 42,000 குறைந்தபட்ச ஊதியத்தை உறுதி செய்!

# கூடுதல் நேரப் பணிக்கு இரட்டிப்பு ஊதியத்தை உறுதிப்படுத்து!

**வெடித்துப் பரவும் தொழிலாளர் போராட்டங்கள்**

தொழிலாளர் விரோத, நான்கு கார்ப்பரேட் தொகுப்புச் சட்டங்களை அமுல்படுத்திவிட்டால், தொழிற்சங்கங்களை ஒழித்துவிடலாம், தொழிலாளர் போராட்டங்களை ஒடுக்கிவிடலாம் என கனவு கண்டது மோடி அரசு. நான்கு தொகுப்புச் சட்டங்கள் அமுலுக்கு வருவதாக ஏப்ரல் 1 அன்று மோடி கையெழுத்து இட்ட மை இன்னும் காயவில்லை. தொழிலாளர் போராட்டங்கள் ஒன்றிலிருந்து மற்றொன்று, ஒரு நகரத்திலிருந்து மற்றொரு நகரம் என காட்டுத் தீயாக பரவிக் கொண்டிருக்கின்றன. ஹரியானாவின் பானிபட் நகரில் இந்திய எண்ணெய் நிறுவனத்தில் (ஐ.ஓ.சி.எல்), பொதுத்துறை நிறுவனத்தில், துவங்கிய தொழிலாளர் போராட்டம், மானேசருக்கு விரிவடைந்தது. மானேசரின் தனியார் - கார்ப்பரேட், பன்னாட்டு - தொழில் நிறுவன தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்தனர். அது குஜராத்தின் சூரத்துக்குப் பரவியது. சூரத்தில் வேலைநிறுத்தம் மட்டுமல்ல, கேஸ் தட்டுப்பாடும், விலை உயர்வும் சேர்ந்து கொண்டதால் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர் ஊர் திரும்புவதற்காக



ரயில் நிலையத்தில் அலைமோதிய வீடியோ வைரல் ஆகியது. தொழிலாளர் வேலைநிறுத்தப் போராட்டத் தீ உத்தரப்பிரதேசத்தின் நோய்டாவில் கொழுந்து விட்டு எரிந்தது. மதர்சன், ரிச்சா குளோபல் உள்ளிட்ட பல கார்ப்பரேட், பன்னாட்டு நிறுவன தொழிலாளர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்தனர்.

இவை தொழிற்சங்கங்களின் திட்டமிட்ட போராட்டங்கள் அல்ல. அந்தத் தொழிலாளர் சங்க உறுப்பினர்களும் அல்ல. அவை முதலாளித்துவ குரூர சுரண்டலுக்கு எதிராக தன்னெழுச்சியாக வெடித்துக் கிளம்பிய கலகங்கள். அத்துக் கூலிக்கு 12 மணி நேரம் வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்பட்ட காரணத்தால் கொதித்தெழுந்த தொழிலாளரின் எழுச்சிகள்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஒரு கம்பெனி, இரண்டு கம்பெனி தொழிலாளர் அல்ல, பல பன்னாட்டு, உள்நாட்டு கார்ப்பரேட் கம்பெனிகளைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான இளம் தொழிலாளர். அவர்களில் ஒருவர் கூட நிரந்தரத் தொழிலாளர் அல்ல. அனைவரும் தினக்கூலி, பயிற்சியாளர், காண்ட்ராக்ட் என பல்வேறு பட்டங்கள் சூட்டப்பட்ட அமைப்பாக்கப்படாத தொழிலாளர். ரூ.10,000-11,000 மாதச் சம்பளம் பெற்று வரும் தொழிலாளர். 12 மணி நேரம், 14 மணி நேரம் வேலை செய்யும் தொழிலாளர். அது மட்டுமல்ல, இந்தத் தொழிலாளரில் பெரும்பாலானவர்கள் பீகார், ஜார்க்கண்ட் போன்ற மாநிலங்களிலிருந்து வேலை தேடி வந்த புலம்பெயர் தொழிலாளர். அவர்கள் தமது வறுமை காரணமாக போராடத் துணிய மாட்டார்கள் என முத்திரை குத்தப்பட்டவர்கள்

அந்தத் தொழிலாளர்தான் மோடியின் தொழிலாளர் விரோத சட்டத் தொகுப்பின் ஒவ்வொரு வெளிப்பாட்டுக்கும் எதிராக வீதியில் அணிவகுத்து வருகிறார்கள். இத்தகைய மாபெரும் போராட்டத்தை எதிர்பாராத யோகி அரசாங்கம் இது நகர்ப்புற நக்சல்கள் வேலை, பாகிஸ்தான் சதி என திசை திருப்புகிறது. தங்கள் உரிமைகளுக்காகப் போராடும் தொழிலாளரை தேச விரோதிகள் என சொல்லப் பார்க்கிறது. டெல்லி விவசாயிகள் போராட்டத்தின்போது அவர்களை காலிஸ்தானிகள் என முத்திரை குத்திய அதே பழைய, தோற்றுப்போன செயல்தந்திரத்தை தொழிலாளர் போராட்டத்திலும் பய்ன்படுத்தப் பார்க்கிறது மோடி - யோகி இரட்டை என்ஜின் அரசாங்கங்கள்.

அதையும் மீறி போராட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஒரு தொழிற்சாலையில் போராட்டம் முடிந்தது போல் காணப்பட்டால், மற்றொரு தொழிற்சாலையில் துவங்குகிறது. ஒரு நகரத்தில் ஒரு போராட்டம் முடிந்தது போல் காணப்பட்டால், மற்றொரு நகரத்தில் துவங்குகிறது. இப்படி, டெல்லி, ஹரியானா, ராஜஸ்தான், பஞ்சாப், உத்தரகண்ட், உத்தரபிரதேச மாநிலங்களின் தொழில் நகரங்கள் தொழிலாளர் போராட்டங்களால் பற்றி எரிந்து கொண்டிருக்கின்றன.

ஏற்றுமதி ஆடைத் தொழிலாளர் முதல் எலக்ட்ரானிக் தொழிலாளர் வரை அனைத்து வகைப்பட்ட தொழிலாளரும் போராட்டத்தில் எழுந்து வருகிறார்கள்.

அவர்களின் கோரிக்கை ஒற்றை கோரிக்கைதான். மாதச் சம்பளம் ரூ. 20,000க்குக் குறைவில்லாமல் வழங்கப்பட வேண்டும் என்பது தான். சில நகரங்களில், குறிப்பாக பொதுத் துறைகளில், அதே கோரிக்கை ரூ.30,000 என முழங்குகிறது.

அதோடுகூட, மனிதத் தன்மையற்ற 12 மணி நேர வேலை தடுக்கப்பட வேண்டும். அதற்கு இரட்டிப்பு சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் உயர்ந்து ஒலிக்கிறது.

ஆனால், மோடியின் தொழிலாளர் விரோத தொகுப்புச் சட்டங்கள் குறைந்தபட்ச ஊதியத்தை ஒழித்து, தரைமட்ட ஊதியம் நிர்ணயிப்பது பற்றி பேசுகிறது. அது நடைமுறைக்கு உதவாது என்பதை இப்போது நடக்கும் இத் தொடர் போராட்டங்கள் வெளிச்சமிட்டுக் காட்டியிருக்கின்றன.

வேலை நேரத்தை சட்டப்படியே 12 மணி நேரமாக்குகிறது மோடியின் புதிய தொகுப்புச் சட்டங்கள். அதை ஏற்றுக்கொள்ள முடியாது என வெடித்தவைதான் இந்த தொடர் போராட்டங்கள்.

இந்த அறிகுறியை மோடி அரசு புரிந்து கொள்ள முன்வரவில்லை என்றால் வரும் காலத்தில் ஆங்காங்கே வெடித்தெழும் போராட்டங்களையும் மோடி அரசு அடக்கிட முடியாது என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும்.

தொழிலாளர் வெடிப்புகளின் காரணமாக மார்ச் இறுதியில் அறிவிக்கப்பட்ட குறைந்தபட்ச ஊதிய உத்தரவை ரத்து செய்து ஏப்ரல் 17 அன்று 21 சதவீத ஊதிய உயர்வை அறிவித்திருக்கிறது யோகி அரசாங்கம். ஆனால், அந்த 21 சதவீத சம்பள உயர்வு அறிவிப்பில் கூட, நோய்டா போன்ற தொழில் நகரத்தில் திறன் சாரா தொழிலாளிக்கு மாதம் ரூபாய் வெறும் 13,690 மட்டுமே. சராசரியாக 13,000 மாத சம்பளம் பெறும் ஒரு தொழிலாளி மாத வாடகை மட்டும் ரூ 4,000 முதல் 7,000 வரை கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆண்டுக்கு மாத வாடகை ரூ 500 ஏறுகிறது. கேஸ் சிலிண்டர் விலை ரூ 4000 – 5000 அளவுக்கு சென்று விட்டது. அப்படி இருக்கும்போது, யோகி அறிவித்த ஊதிய உயர்வு, மாத செலவுகள் உயர்வை ஈடுகட்டக் கூட போதாது. எனவேதான், மாதம் ரூ 20,000 க்குக் குறைவாக எதையும் ஏற்றுக் கொள்ள முடியாது என போராட்டங்கள் வெடிக்கின்றன.

ஹரியானாவில் 35 சதவீதம் ஊதிய உயர்வு அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதுவும் கூட மானேசர் போன்றதோர் உலக மூலதன மையமான தொழில் நகரில் ஒரு திறன் சாரா தொழிலாளிக்கு மாதம் ரூ 15,220 வரை மட்டுமே அறிவித்திருக்கிறது. அறிவிக்கப்பட்டிருக்கும் உயர்வானது தொழிலாளரின் முக்கிய கோரிக்கையான ரூ 20,000 ஐ எட்டவில்லை. தொழிலாளர் பெரும் அதிருப்தியில் இருக்கிறார்கள். அதனால் போராட்டங்கள் உடனடியாக தணிவதற்கான வாய்ப்பு ஏதும் தென்படவில்லை.

தொழிலாளரின் தொடர் போராட்டங்களால் நிர்ப்பந்திக்கப்பட்டு, உத்தரபிரதேச, ஹரியானா மாநில அரசுகள் அறிவித்திருக்கும் குறைந்தபட்ச ஊதிய அறிவிப்புகள்தான், ஊதியம் குறித்த புதிய ஊதிய தொகுப்புச் சட்டம், 2019ன் கீழ், நாட்டிலேயே முதல் முதலாக அறிவிக்கப்பட்டிருக்கும் அறிவிப்பு ஆகும். புதிய தொகுப்புச் சட்டங்கள் நடைமுறைக்கு வரும்போது தொழிலாளர் ஊதியம் கூரையைப் பிய்த்துக் கொண்டு போகும் என்று பீற்றிக் கொண்ட மோடியின் வாய்ச் சவடாலை அது பொய்யாக்கி இருக்கிறது.

ஏற்கனவே வாய்க்கும் வயிறுக்கும் போதாமல், பட்டினிக் கூலி பெற்று வாழ்க்கை நடத்தி வரும் தொழிலாளருக்கு கேஸ் விலை உயர்வு எரிகிற தீயில் எண்ணெய் ஊற்றியது போலாகிவிட்டது. அது நியாயமான கூலி வேண்டும் என தொழிலாளரை போராட்டத்தில் எழச் செய்திருக்கிறது.

தொழிலாளரின் நியாயமான கோரிக்கைகளை கவலையோடும் கரிசனத்தோடும் பரிசீலிப்பதற்கு மாறாக, ஹரியானா, உத்தரபிரதேச அரசாங்கங்கள் காவல் துறையைக் கொண்டு அடக்கு முறையை ஏவிவிடுகின்றன. போலீஸ் தடியடிகள், கண்ணீர்ப்புகைக் குண்டுகள், எண்ணற்ற கைதுகள், வீட்டுக் காவலில் தொழிற்சங்கத் தலைவர்கள், சிறைகளில் வாடும் தொழிலாளர் என கொடூரமான அரசு ஒடுக்குமுறைகளுக்கு மத்தியில் இந்த தன்னெழுச்சிப் போராட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

இந்தப் போராட்டங்களில் பெரும் பங்காற்றிய பெண் தொழிலாளரை ஆண் காவலர்கள் மிருகத்தனமாக தாக்கியிருக்கின்றனர். தொழிலாளர் போராட்டங்களை ஒடுக்குவதற்காக காவல்துறையும் தனியார் கம்பெனி பவுன்சர்களும் கைகோர்த்துக் கொண்டு மிகக்கடுமையான வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டிருக்கின்றனர்.

நோய்டா ஏஐசிசிடியு தலைவர் தோழர் அமர் சிங் உள்ளிட்ட தொழிற்சங்கத் தலைவர்கள், சமூக செயல்பாட்டாளர்கள், தொழிலாளருக்கு சட்ட உதவி வழங்கும் வழக்குரைஞர்கள் உள்ளிட்ட அனைவரும் வேட்டையாடப்படுகின்றனர்.

தொழிலாளரின் இந்தத் தொடர் போராட்டங்கள் பிஜேபி ஒன்றிய மற்றும் பிஜேபி ஆளும் மாநில அரசாங்கங்களுக்கும் கார்ப்பரேட் கம்பெனிகளுக்கும் இடையிலான வெளிப்படையான கூட்டை வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கின்றன.

இந்நிலையில், ஈரான் மீதான அமெரிக்க-இஸ்ரேல் போருக்கும், பாலஸ்தீனம் மீதான இஸ்ரேலின் இனப்படுகொலை போருக்கும் எதிராக, இந்தியத் தொழிலாளர் வர்க்கமும், உலகத் தொழிலாளர் வர்க்கமும் தமது ஆதரவை உறுதிபட தெரிவித்து உள்ளன. மோடி அரசு, அமெரிக்க ஏகாதிபத்தியத்திடம், அதன் அதிபர் டொனால்ட் டிரம்பிடம் சரணடைந்து விட்டதின் காரணமாக, நாட்டின் எல்பிஜி எரிவாயு கேஸ் நெருக்கடியை மோடியால் தடுக்க முடியவில்லை. அதிகரித்து வரும் எரிவாயு விலை மற்றும் பணவீக்கத்தால் உழைக்கும் வர்க்கம் கடுமையாகப் பாதிக்கப்படுகிறது.

இன்னொருபுறம், தொழிற்துறை விபத்துகள் பரவலாக நிகழ்கின்றன. ஆந்திரா, தமிழ்நாடு முதல் டெல்லி மற்றும் உத்தரப்பிரதேசம் வரை, பாதுகாப்பான பணிச்சூழல் மறுக்கப்படுகிறது, அனைத்துப் பாதுகாப்பு விதிமுறைகளும் மீறப்படுகின்றன. பாதுகாப்பு விதிமுறைகளை மீறுவதையே வழக்கமாகக் கொண்ட கார்ப்பரேட் பெருநிறுவனங்களின் லாபவெறியால் தொழிலாளர் உயிரிழக்கின்றனர். இந்த மே நாளில், நாடு முழுவதும் நூற்றுக்கணக்கான தொழிலாளரின் மரணங்களும், தொழில்துறை விபத்துகளும் ஒரு பெரும் பிரச்சனையாக உருவெடுத்துள்ளன.

ஆஷா, அங்கன்வாடி மற்றும் மதிய உணவுத் திட்டப் பணியாளர்கள் உள்ளிட்ட திட்டப் பணியாளர்களுக்கு, தொழிலாளர் என்ற தகுதியும், குறைந்தபட்ச ஊதியமும், சமூகப் பாதுகாப்புப் பலன்களும் திட்டமிட்டு மறுக்கப்படுகின்றன. திட்டப் பணியாளர்களின் கோரிக்கைகளை வெல்வதற்காக நாம் போராட்டங்களைத் தீவிரப்படுத்திட உறுதி ஏற்றிட வேண்டும்.

நாடு முழுவதும் உள்ள தூய்மைப் பணியாளர்கள் மிகக் குறைந்த ஊதியத்துக்கு எதிராக, திட்டமிடப்பட்ட சமூக, பொருளாதார ஒடுக்குமுறைகளுக்கு எதிராக, பணி நிரந்தரத்திற்காக, உரிமைகளுக்காக போராடி வருகின்றனர். இந்தப் போராட்டங்களைத் தீவிரப்படுத்திட நாம் உறுதியேற்க வேண்டும்.

தற்போது நடந்து வரும் தொடர் தொழிலாளர் எழுச்சிப் போராட்டங்கள், புதிய தொகுப்புச் சட்டங்களுக்கு எதிராக, மோடி அரசு - கார்ப்பரேட் மூலதன கள்ளக்கூட்டுக்கு எதிராக நாளை அலைஅலையாக எழுந்துவர இருக்கும் போராட்டங்களுக்குக் கட்டியம் கூறுவதாக இருக்கின்றன.

2026-ன் இந்த மே நாளில், இந்திய தொழிலாளர் வர்க்கம் தனது உரிமைகளை, குறிப்பாக எட்டு மணி நேர வேலை உரிமைகளை, உறுதியாக பாதுகாத்திட வேண்டும், புதிய தொகுப்புச் சட்டங்களைத் தடுத்து நிறுத்திட வேண்டும் என ஏஐசிசிடியு அறைகூவல் விடுக்கிறது.

போராடும் தொழிலாளருக்கு ஆதரவாக இந்திய தொழிலாளர் அனைவரும் தோளோடு தோள் நின்று ஆதரவு தெரிவித்திட வேண்டும்; கார்ப்பரேட் சட்டத் தொகுப்புகளுக்கு எதிராகவும், தொழிலாளர் மீதான ஒடுக்குமுறைக்கு எதிராகவும், புதியதோர் இயக்கத்தை, அலைஅலையான போராட்டங்களின் புதியதோர் இயக்கத்தை கட்டி எழுப்பிட வேண்டுமென இந்திய தொழிலாளர் வர்க்கத்துக்கு ஏஅய்சிசிடியு அறைகூவல் விடுக்கிறது.

கீழ்க்காணும் கோரிக்கைகளுக்காக இந்திய தொழிலாளர் வர்க்கம் போராட்டத்தில் எழுந்திட வேண்டுமென ஏஐசிசிடியு அறைகூவல் விடுக்கிறது!

நியாயமான கோரிக்கைகளுக்காக போராடும் தொழிலாளர் மீது ஏவப்படும் ஒடுக்குமுறையை உடனே நிறுத்து! சிறை வைக்கப்பட்டுள்ள தொழிலாளரை, தொழிற்சங்கத் தலைவர்களை நிபந்தனை ஏதுமில்லாமல் உடனடியாக விடுதலை செய்!

நாளொன்றுக்கு ரூ 1500, மாதம் ரூ 42,000 குறைந்தபட்ச ஊதியமாக உடனே அறிவித்திடு!

12 மணிநேர வேலை முறையை ஒழித்துக்கட்டு! 8 மணி நேரத்துக்கும் மேல் செய்யும் வேலைக்கு இரட்டிப்பு சம்பளத்தை கட்டயமாக்கு!

ஒப்பந்த முறை, பயிற்சியாளர் முறை, தினக்கூலி, குறிப்பிட்ட கால வேலை போன்ற பெயர்களில் நடத்தும் பகல் கொள்ளையை உடனே நிறுத்தி, அவர்களை பணி நிரந்தரம் செய்!

**தொழிலாளர் விரோத, கார்ப்பரேட் ஆதரவு தொகுப்புச் சட்டங்களை ரத்து செய்!**

**மே நாள் வெல்க!**

**தொழிலாளர் ஒற்றுமை ஓங்குக!!**

**AICCTU**

**அகில இந்திய தொழிற்சங்க மைய கவுன்சில்**






# “மேற்கு வங்க சட்டமன்றத்திற்குள் மீண்டும் சென்றிட பரந்த இடதுசாரி ஒற்றுமை மிக முக்கியமானது.”




மேற்கு வங்கத்தில் இடதுசாரிகளின் வாக்கு விகிதம் கடுமையாக சரிவடைந்துள்ளது. எனவே, சட்டமன்றத்திற்குள் மீண்டும் நுழைவதற்கு ஒரு ‘குறிப்பிட்ட பலம்’ (critical mass) தேவை என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) விடுதலையின் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார். மேலும், அவர் எஸ்ஐஆர் (சிறப்பு தீவிர திருத்தம்) நடவடிக்கையை ‘அதிகாரப் பறிப்பின் தொடக்கம்’ என்று அழைக்கிறார். கம்யூனிஸ்ட் இயக்கம் கிராமப்புற வங்கத்தின் மீது கவனம் செலுத்த வேண்டும்; நொய்டா போராட்டங்கள் போன்ற புதிய தலைமுறையினரின் பிரச்சினைகளையும் கையாளத் தெரிய வேண்டும் என்றும் அவர் கூறுகிறார்.

“வங்கத்தில் ஒரே ஒரு வகை இடதுசாரிகள் மட்டுமே உள்ளனர் — அது எதிர்க்கட்சி இடதுசாரிகள் மட்டுமே. மேற்கு வங்க சட்டமன்றத்திற்கு நாம் மீண்டும் திரும்புவதற்கு இடதுசாரி ஒற்றுமை மிகவும் அவசியமானது.” என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) விடுதலை அமைப்பின் பொதுச் செயலாளர் திபங்கர், வங்கத்தில் இடது முன்னணியுடனான தமது கட்சியின் கூட்டணி குறித்து கொல்கத்தாவில், இந்து (ஆங்கிலம்) பத்திரிக்கைக்காக, ஷ்ரபனா சாட்டர்ஜியுடன் பேசுகையில் தெரிவித்தார். அதன் சுருக்கம்:

**ஷ்ரபனா:** கடந்த பத்தாண்டுகளாக வங்கத்தில் இடதுசாரிகள் தேர்தல் ரீதியாகப் பெரும் சவாலை சந்தித்துள்ளனர். சட்டமன்றத்திற்குள் மீண்டும் நுழைய நீங்கள் என்ன திட்டமிட்டுள்ளீர்கள்?

**திபங்கர்:** சட்டமன்றத்திற்குள் மீண்டும் நுழைவதற்கு நமக்கு ஒரு குறிப்பிட்ட அளவிலான பலம் தேவை. வங்கத்தில் இடதுசாரிகளின் வாக்கு விகிதம் கடுமையாகச் சரிந்துள்ளது; எனவே இந்த முறை சட்டமன்றத்திற்குள் நுழைவதற்கு குறைந்தபட்சம் சில தொகுதிகளிலாவது நல்ல வாக்கு விகிதத்தைப் பெறுவோம் என்று நம்புகிறோம். ஒரு பரந்த இடதுசாரி ஒற்றுமை என்பது சவாலான விஷயமாக இருந்தாலும் நாம் மீண்டும் சட்டமன்றத்திற்குள் வருவதற்கான வழி அதுதான். மாநிலத்தில் இடதுசாரிகள் 34 ஆண்டுகளுக்கும் மேலாக ஆட்சியில் இருந்தபோது கூட, நாங்கள் (மா லெ) கூட்டணியில் இல்லாமல் தனித்தே களம் கண்டோம். ஆனால் இப்போது, வங்கத்தில் ஒரே ஒரு வகை இடதுசாரிகள் மட்டுமே உள்ளனர் — அது எதிர்க்கட்சி இடதுசாரிகள் மட்டுமே. இப்போது ஆட்சியில் இடதுசாரிகள் யாரும் இல்லை; அதனால்தான் சட்டமன்றத்திற்கு மீண்டும் திரும்புவதற்கு ஒரு பரந்த இடதுசாரி ஒற்றுமை மிக முக்கியமானது.

**ஷ்ரபனா:** இந்தத் தேர்தலில் முக்கிய தீர்மானிக்கும் சக்தியாக இருக்கும் இளம் வாக்காளர்கள், இடதுசாரிகளை ஒரு காலாவதியான சக்தியாகவே பெரும்பாலும் கருதுகின்றனர். இந்த எண்ணத்தை மாற்றி, அவர்களின் ஆதரவைப் பெறுவதற்கான உத்திகள் என்ன?

**திபங்கர்:** இடது முன்னணி ஆட்சியில் இருந்ததைப் புதிய வாக்காளர்கள் பார்த்ததில்லை. அவர்கள் திரிணாமுல் காங்கிரஸ், பாஜக ஆட்சியை மட்டுமே பார்த்திருக்கிறார்கள். முதன்முதலில் வாக்களிப்பவர்களின் அனுபவம் மிகவும் முக்கியமானது; அதில் நாம் கவனம் செலுத்த வேண்டும். அதேபோல், இடதுசாரிகளின் கோட்டையாக இருந்த கிராமப்புற வங்கத்தின் மீதும் நாம் கவனம் செலுத்த வேண்டும். கிராமப்புற வங்கத்தில் இடதுசாரிகள் மீட்சியடையாவிட்டால், மீட்சியென்பதே இல்லாமல் போய்விடும்.

“எனவே, அமைப்புரீதியான மீட்சி இல்லாமல், நகர்ப்புற நடுத்தர வர்க்கத்தை மையப்படுத்திய, சமூக ஊடகங்களைச் சார்ந்த டிஜிட்டல் மீட்சி என்ற எந்த யோசனையும் நமக்கு உதவாது. நொய்டா ஊதியப் போராட்டம், ஆர்.ஜி.கர் போராட்டம், ‘இரவை சொந்தம் கொள்வோம்’ போராட்டங்கள், திருநங்கைகள் மசோதா... போன்ற புதிய தலைமுறையினர் கவனிக்கும் பிரச்சினைகளை நாம் முன்னெடுக்க வேண்டும். இளம் தலைமுறையினர் என்ன கோருகிறார்கள்? ஒழுக்க நெறி பற்றிப் பேசிக்கொண்டிருப்பதையும், அவர்களை முன்முடிவுகளுடன் அணுகுவதையும், நமக்கு வாக்களிக்காத மக்களை ஒதுக்கித் தள்ளுவதையும் விடுத்து, நாம் தொடர்ந்து இந்தப் பிரச்சினைகளைக் கையாள வேண்டும்... அப்போதுதான் இளைய தலைமுறையினர் மீண்டும் இடதுசாரிகளை நோக்கித் திரும்புவார்கள்.”

**ஷ்ரபனா:** சிறப்பு தீவிர திருத்தம், வாக்காளர் பட்டியலில் இருந்து பெருமளவில் பெயர்கள் நீக்கப்படுவதற்கு வழிவகுத்துள்ளது. இந்த நீக்கங்களுக்குப் பிந்தைய தேர்தல் முடிவுகள் மக்களின் உண்மையான தீர்ப்பாக இருக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

**திபங்கர்:** 27 லட்சம் பேரின் வாக்குரிமை பறிக்கப்பட்டுள்ளது; இது மிகப் பெரிய எண்ணிக்கை. இந்த எண்ணிக்கை சிறியதாக இருந்தாலும்கூட, எந்தவொரு வாக்குரிமைப் பறிப்பும் மக்கள் தீர்ப்பைப் பாதிக்கும். இது முன்னெப்போதும் இல்லாத, ஒரு தீய செயலாகும். நீண்ட கால அடிப்படையில் பார்த்தால், இது அந்த 27 லட்சம் மக்களுடைய இருத்தலின் எதிர்காலத்தையே பாதிக்கும்.

இப்போது பீகாரைப் பார்த்தீர்கள் என்றால், அங்கு 22 லட்சம் பேரின் வாக்குரிமை பறிக்கப்பட்டது. இப்போது அரசாங்கம் அவர்களின் குடும்ப அட்டைகளைப் பறிக்கப் போகிறோம்... அவர்களின் ஓட்டுநர் உரிமங்களைப் பறிக்கப் போகிறோம் என்று சொல்கிறது. இது உரிமை பறிப்பு நடவடிக்கையின் ஆரம்பம் மட்டுமே. இது குடிமக்களில் ஒரு ஒட்டுமொத்த பிரிவினரையே செல்லாதவர்களாக ஆக்குவதற்குச் சமம். இது உண்மையில் எங்கு போய் முடியும் என்று எனக்குத் தெரியவில்லை. மேலும் இந்தியா முழுவதும் இந்த எண்ணிக்கை கூடிக்கொண்டே போகிறது. ஆக, உண்மையிலேயே, எந்த உரிமையுமற்ற சில கோடி மக்களை நாம் பார்க்கிறோம். அவர்கள் தங்கள் சொந்த மண்ணிலேயே சட்டவிரோதக் குடியேறிகளைப் போல இருப்பார்கள். *[மத்திய உள்துறை அமைச்சர்]* அமித் ஷாவின் வார்த்தைகளில் சொல்வதானால் – ‘நீக்கியபின் கண்டுபிடி; கண்டுபிடித்தேன் என்று சொல்லி நாடு கடத்து’ என்பதாக இருக்கிறது.

**ஷ்ரபனா:** (வாக்காளர் பட்டியலில்) பெயர் நீக்கப்பட்டிருப்பது குறித்து மக்களிடையே கோபம் இருப்பதை நாம் பார்த்துள்ளோம். ஆனால் பரவலாக கூறப்படுவதை போல, இந்தப் போராட்டங்கள் அனைத்தும் அரசியல் நோக்கம் கொண்டவை என்று நீங்கள் நினைக்கிறீர்களா, அல்லது அவை மக்களின் தன்னெழுச்சியான, இயல்பான போராட்டங்களும் தானா?

**திபங்கர்:** எஸ்ஐஆர் நடவடிக்கை என்பது மற்ற மாநிலங்களை விட வங்கத்திற்கு ஒரு பெரும் துன்புறுத்தலாகவே இருந்துள்ளது. ‘தர்க்கரீதியான குறைபாடுகள்’, ‘விசாரணையில் உள்ளது’ போன்ற புதிய விஷயங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன; அனைத்து வகையான துன்புறுத்தல்களும் அரங்கேறின. எனவே, இது மக்களின் போராட்டம் என்றே கருதுகிறேன். இதை அரசியல் கண்ணாடி வழியாக பார்க்க மறுக்கிறேன்; உங்களால் ஒருவரைப் பாதுகாக்கவோ, ஒருவரின் வாக்கைக் காப்பாற்றவோ முடியுமானால், அவர்களின் அரசியல் சித்தாந்தங்கள் நம்முடன் ஒத்துப்போகாவிட்டாலும் கூட, நாம் நிச்சயமாக அதனைச் செய்ய வேண்டும். இந்தப் போராட்டங்கள் நாட்டின் ஒவ்வொரு குடிமகனின் வாக்குரிமை பற்றியது. இந்த எஸ்ஐஆர் நடவடிக்கைக்குப் பின்னால் ஒரு அரசியல் நோக்கம் இருக்கலாம்; அதாவது மிகவும் குறிப்பாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை, குறிவைக்கப்பட்டவர்களை விலக்கி வைக்கும் (வாக்கை மறுக்கும்) நடவடிக்கையாக அது இருக்கலாம். ஆனால் அதனால் பாதிக்கப்படுவது, நிச்சயமாக, சாதாரண மக்கள்தான்.

**ஷ்ரபனா:** இந்த முறை இடதுசாரிகள் ஏன் காங்கிரசுடன் கூட்டணி அமைக்கவில்லை?

**திபங்கர்:** அது காங்கிரசின் தேர்வு. ஆனால், காங்கிரஸ், இந்திய மதச்சார்பற்ற முன்னணியுடன் (ஐஎஸ்எஃப்) இணைந்து ஒரு பரந்த கூட்டணியை ஏற்படுத்தும் யோசனைக்கு சிபிஐ(எம்) தயாராகவே இருந்தது.

**தமிழாக்கம்: விஜி**

# பிஜேபியின் தேர்தல் அறிக்கை – ஒரு பாசிசக் கனவு!

- சங்கர். வீ -

தேர்தல் முடிந்த பிறகு பிஜேபியின் தேர்தல் அறிக்கை பற்றி பேசுவது கேள்வியை எழுப்பலாம். ஆனால், பிஜேபியின் தேர்தல் அறிக்கை என்பது தேர்தலுக்கானது மட்டுமல்ல, அது பிஜேபியின் தமிழ்நாட்டுக்கான எதிர்காலத் திட்டம். எனவே, அதைப்பற்றிப் பேசுவது அவசியம் ஆகிறது.

### போட்டா போட்டி ஜனரஞ்சகவாதம்

2026 தேர்தல் களம் என்பது காய்கறி விற்கும் சந்தை போல ஆகிவிட்டது. பெண்களுக்கு கட்டணமில்லா பேருந்து பயணத்தை திமுக அமல்படுத்தியுள்ளதால், ஆண்களுக்கும் கட்டணமில்லா பேருந்து பயணம் என்கிறது அதிமுக. பெண்களுக்கு மாதம் ரூ 2000 என்கிறது திமுக; 2500 என்கிறது அதிமுக. தன் பங்கிற்கு வேலையில்லா நிவாரணம் ரூ.4000 என்கிறது தவெக. அனைவருக்கும் குளிர் பதனப் பெட்டிகள் இலவசம் என்கிறது அதிமுக; மக்கள் என்ன எலெக்ட்ரானிக் பொருள் வாங்க விருப்பமோ அதை வாங்கிக் கொள்ள ரூ 8000 கூப்பன் என்கிறது திமுக. இன்னும் ஒரு படி மேலே சென்று அனைவரும் ஒரு கார் வாங்கும் நிலைக்கு அவர்களது நிலைமையை மேம்படுத்துவோம் என்கிறது தவெக. இங்கு நாம் சொல்லி இருப்பது கொஞ்சம்தான். அது மிக நீளமான பட்டியல். அனைத்துக் கட்சிகளும் போட்டா போட்டி போட்டுக் கொண்டு சட்டமன்றத் தேர்தல் களத்தில் நடத்தும் ஜனரஞ்சகவாத அரசியல்.

இலவசங்களுக்கு எதிரான அரசியல் பேசிவந்த, எள்ளி நகையாடிய பிஜேபி, தமிழ்நாட்டில் சுமார் 60,000 கோடி அளவுக்கு இலவச நலத் திட்டங்களை அறிவித்திருக்கிறது. ஏற்கனவே, கடனில் தத்தளிக்கும் தமிழ்நாடு அந்தப் பணத்தை எப்படி உருவாக்கும் என்பது பற்றி ஒரு வார்த்தையும் பேசவில்லை பிஜேபி. ஒருவேளை, தமிழ்நாட்டுக்குத் தர வேண்டிய ஜிஎஸ்டி வரிப் பகிர்மானத்தை அதிகப்படுத்துவோம் என்றோ, தமிழ்நாட்டுப் பங்கை முழுமையாக கொடுத்து விடுவோம் என்றோ சொல்லியிருந்தால் அவர்களின் வாக்குறுதிகளை நம்பலாம். மாறாக, அவை வெறும் ஜித்து விளையாட்டுகளே.

### கார்த்திகை தீபத் தீ

பிஜேபியின் கவலை முற்றிலும் மாறுபட்டது. நாட்டில் நிலவும் வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், வேலை இழப்பு, விலைவாசி உயர்வு, கல்விக்கும் மருத்துவத்திற்கும் ஆகும் அபாரச் செலவுகள் போன்ற மக்கள் கவலைப்படும், அல்லல்படும் பிரச்சனைகள் எவை பற்றியும் அவர்களுக்கு அக்கறை கிடையாது. தென்னாட்டு அயோத்தியாக திருப்பரங்குன்றத்தை மாற்றுவோம், தென்னாட்டு காசியாக ராமேஷ்வரத்தை மாற்றுவோம், மதுரை மீனாட்சி அம்மன் கோவில் உள்ளிட்ட அனைத்துக் கோவில்களும் புனிதத் தலங்கள் ஆகையால், அவற்றை அரசிடமிருந்து மீட்போம் – இப்படித்தான் பிஜேபியின் திட்டம் இருக்கிறது. அதைத்தான் பிஜேபியின் அகில இந்திய தலைவர் நிதின் நபின் ஆரம்பித்து பாஜக அமைச்சர் ராஜ்நாத் சிங், உ.பி. முதல்வர் யோகி வரை தேர்தல் பரப்புரைக்கு வந்த அனைவரும் வலியுறுத்தினர். அப்போது கூட, திருப்பரங்குன்றத்தைப் போல, முருகன் கோவிலும் தர்காவும் அக்கம்பக்கமாக, மத நல்லிணக்கத்தின் சின்னமாக இருப்பது போல அயோத்தியை மாற்றுவோம் என்று சொல்லத் தயாராக இல்லை. சொல்ல மாட்டார்கள். அயோத்தியில் எப்படி பாபர் மசூதி இடிக்கப்பட்டதோ அதே போல திருப்பரங்குன்ற மலையில் இருக்கும் தர்காவை அகற்றுவோம் என்று வெளிப்படையாகச் சொல்கிறார்கள். அது மட்டுமல்ல, தர்கா அருகில் உள்ள தூணில் தீபத்தை ஏற்றியே தீருவோம் என அவர்களது தேர்தல் அறிக்கை சொல்கிறது. இதுவே பிஜேபியின் மதவெறி அரசியல் திட்டத்தை, தமிழ்நாட்டு மக்களை மதவெறி அடிப்படையில் துண்டாட, வெறுப்பு அரசியலை ஊட்டி வளர்த்திட நினைக்கும் அதன் சதியை அம்பலப்படுத்துகிறது. ஏப்ரல் 12 அன்று சாத்தூர் முதல் மதுரை வரை சாலையோர பரப்புரையில் ஈடுபட்ட பிஜேபியின் அகில இந்திய தலைவர் நிதின் நபின், ஊழல் திமுக என்றும் தாங்கள் ஊதி வளர்க்கும் மதவெறி அரசியல் பற்றி மட்டுமே மாறி மாறிப் பேசினார்.

### மதவெறி அரசியல் கலந்த ஆட்சி முறை

முருகப் பெருமானுக்கு மரியாதை செலுத்தும் விதத்தில் தைப் பூசம் அரசு விழாவாக அறிவிக்கப்படும் என்கிறது பிஜேபி. எம்மதமும் சம்மதம் என்றல்ல. இந்து மதமே அரசின் மதம் என்கிறது தேர்தல் வாக்குறுதி. அது அத்தோடு முடியவில்லை. ‘திருக்கோவில் நித்திய பூஜை தொகுப்புத் திட்டம்’ என ஒன்றை அறிவிக்கிறது. அதன்படி, சூடம், நெய் / எண்ணெய், 60 கிலோ அரிசி, குங்குமம், மஞ்சள், விபூதியை அரசே வழங்கும் என்கிறது. அதே போல,

பூஜைக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களான கோவில் மணி, தாம்பூலம், ஆரத்திக்கான பொருட்கள், பூஜைக்கான வேட்டி-சேலை தொகுப்பு இவை அனைத்தையும் அரசே இலவசமாக வழங்கும் என்கிறது. பெண்களுக்கு ஒருமுறை பயனாக அளிக்கும் தொகை கூட ரூ 10 ஆயிரம்தான். ஆனால், பூஜை புனஸ்காரங்களுக்காக ஆண்டுதோறும் ரூ 25,000 வழங்கப்படும் என்கிறது பிஜேபியின் தேர்தல் அறிக்கை. பூஜைக்கு என பொருட்களை அரசே வழங்குவதன் மூலம் தெய்வ வழிபாட்டைப் பயன்படுத்தி மக்களை மயக்கத்தில் ஆழ்த்தி, அதன் மூலம் தனது மதவெறி அரசியலை வளர்த்து விடலாம் என திட்டமிடுகிறது.

இதை இன்னும் வளர்த்திடுவதை நோக்கமாகக் கொண்டு, பலதரப்பட்ட கடவுள்களையும், குறிப்பாக முருகனையும் தாண்டி வெவ்வேறு கிராமத் தெய்வங்களை வழிபடுவதை அதிகரித்திட, "தமிழக கிராமத் தெய்வங்கள் சங்கமம்" எனும் திட்டத்தையும் அறிவித்திருக்கிறது. இது ஒருபுறம் கிராமங்களில் தெய்வ வழிபாட்டைக் கைப்பற்றி, பிராமணியத்தின் ஆகம விதிகளுக்குள் அடங்காத கிராமத் தெய்வங்களை அல்லது சிறு தெய்வங்களை பிராமணிய சட்டகத்துக்குள் உள்வாங்கிக் கொள்ளும் நோக்கம் கொண்டது. இன்னொருபுறம், பெருந்தெய்வ வழிபாட்டை, ஆகம விதிகளை முன்வைக்கும் பிராமணியத்திற்கு எதிராக, இந்துத்துவ சனாதனத்திற்கு எதிராக, திமுக அரசு சிறு தெய்வ வழிபாட்டை முன்நிறுத்துகிறது, அதுதான் தமிழர் கலாச்சாரம் என்கிறது, குடமுழுக்குகள் நடத்துகிறது என்பதனால் அதற்கு பதில் வினையாற்றும் நோக்கத்தையும் கொண்டது. ஆகம விதிகளுக்குள் வராத, கிராமத் தெய்வங்களையும் அதை வணங்குபவர்களையும் இந்துத்துவ வரையறைக்குள் அடைக்கப் பார்க்கிறது ஆர்எஸ்எஸ்-பாஜக. பண்டைய தமிழ்நாட்டில் கடவுள் வழிபாடு இருந்ததற்கான அடையாளமே கீழடி அகழ்வாராய்ச்சியில் காணப்படவில்லை. அதனால்தானோ என்னவோ, கலாச்சாரத் தலைநகரமான தமிழ்நாடு குற்றத் தலைநகரமாக மாற்றப்பட்டுவிட்டது என்று கூறும் பிஜேபி, தமிழ் மக்களின் கலாச்சாரத் தொன்மையை நிரூபிக்கும் கீழடி அறிக்கையை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

நாடு முழுவதும் காசிக்கு செல்ல இலவச பயண வசதியை வழங்குவது போல, தமிழ்நாட்டில் உள்ள திருத்தலங்களுக்குச் சென்றுவர, "தமிழக திருத்தல யாத்திரை" எனும் திட்டத்தையும் முன்வைத்திருக்கிறது.

இவ்வாறாக, தமிழ்நாட்டு மக்களின் சமூக, பொருளாதார ரீதியான முற்போக்குப் பயணத்தை, பின்னோக்கிய பயணமாக மாற்றிட எத்தனிக்கிறது.

### சூடான விவாதங்கள் குறித்து சூட்சும மவுனம் சாதிக்கும் பிஜேபி

மிகத் தாமதமாகத்தான், தேர்தல் பரப்புரை காலம் துவங்கி 5 நாட்களுக்குப் பிறகுதான், தனது தேர்தல் அறிக்கையை வெளியிட்டது பிஜேபி. அதில் தமிழ்நாட்டு அரசியலில் சூடாக விவாதிக்கப்படும் எது பற்றியும் சொல்லப்படவில்லை.

தமிழ்நாட்டு ஏழை, பிற்படுத்தப்பட்ட, பட்டியலின மாணவர்களின் முன்னேற்றத்தைப் பறித்துவிட்ட நீட் குறித்து பிஜேபி எதுவும் சொல்லவில்லை. இரு மொழிக் கொள்கைதான் என்கிறது தமிழ்நாடு அரசு. மொழிக் கொள்கை பற்றி மூச்சு விடவில்லை பிஜேபியின் அறிக்கை. அதேவேளை, வரும் கல்வியாண்டில் மும்மொழிப் பாடத் திட்டம் கட்டாயம் என்று தேர்தல் சமயத்திலேயே ஒன்றிய கல்வி அமைச்சர் அறிவிக்கிறார். மும்மொழிக் கொள்கையை அமுல்படுத்தாததால் தமிழ்நாட்டுக்குத் தராமல் நிறுத்தி வைக்கப்பட்ட ரூ.1200 கோடி நிதியை வழங்குவது பற்றி வாய் திறக்கவில்லை. எல்லாவற்றையும் தனியாரிடம் கொடுத்துக் கொண்டிருக்கும் பிஜேபி, ஏழை மாணவர்களுக்கு கல்வியை எட்டாக்கனியாக்கும் கல்வி தனியார்மயமாக்கத்தை திரும்பப் பெற வாக்குறுதிகூட அளிக்காது என்பது தெரிந்ததுதான். கல்லூரிகள், பல்கலைக் கழகங்களில் காணப்படும் சாதி ஆதிக்கத்தை, ஒடுக்குமுறையை ஒழித்துக்கட்ட சட்டம் இயற்றுவது பற்றியோ, பல்கலைக் கழக மானியக் குழுவின் சுற்றறிக்கையை அமுல்படுத்துவது பற்றியோ பிஜேபி எதுவும் சொல்லாததில் வியப்பேதுமில்லை.

### கூட்டாட்சி முறை

தமிழ்நாடு குறித்த விசயங்களை தீர்மானிப்பது தமிழ்நாட்டு மக்களா, டெல்லியா என நடந்து வரும் விவாதம் பற்றி கப்-சிப்பென இருக்கிறது.

அதீத அதிகார மையப்படுத்தல், பொருளாதார மையப்படுத்தல், சர்வாதிகார ஆட்சி முறை, ஒற்றை ஆட்சி முறை பற்றி கனவு காணும் பிஜேபி, கூட்டாட்சி முறை, கூட்டாட்சி தத்துவம் பற்றி, பொருளாதார கூட்டாட்சி பற்றி அறிக்கையில் கள்ள மவுனம் சாதிக்கிறது. தொகுதி மறுவரையறை செய்யப்பட்டால், தமிழ்நாட்டின் பிரதிநிதித்துவ விகிதாச்சாரத்தைக் குறைக்க மாட்டோம் என சொல்லவில்லை. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பு அடிப்படையில் தொகுதிகள் மறுவரையறை செய்யப்படுமா, 2026 அடிப்படையில் செய்யப்படுமா என்பது குறித்து பின்னர் நாடாளுமன்றம் தீர்மானிக்கும் என அந்த மசோதா சொல்கிறது. ஒன்றிய – மாநில உறவுகள், அதிகாரங்கள் பற்றி பரிந்துரை செய்ய தமிழ் நாடு அரசு ஒரு கமிட்டி அமைத்திருக்கிறது.

தமிழ்நாட்டில் வளர நினைக்கும் பிஜேபி, மாநில அதிகாரம் பற்றிய விவாதம் குறித்தும் மவுனம் சாதிக்கிறது. இவை பற்றியெல்லாம் வாய் திறந்தால் தோல்வி உறுதி என்கிற பயத்தின் காரணமாக ஆழ்ந்த மவுனம் காத்தது போலும்.

**சட்டம்-ஒழுங்கு – பட்டியலின மக்கள் மீதான தாக்குதல்கள்**

சட்டம்-ஒழுங்கை நிலைநாட்டுவது என்கிற பெயரில் விலாவரியாக பேசும் பிஜேபி ஒரு ஒடுக்குமுறை போலீஸ் ஆட்சியை உருவாக்குவதற்கான தனது கருத்தையே முன்வைத்திருக்கிறது. பெண்கள் பிரதிநிதித்துவம், பாதுகாப்பு குறித்து முதலைக் கண்ணீர் வடிக்கும் பிஜேபி, தற்போது இருக்கும் நாடாளுமன்றத் தொகுதிகளில் 33 சதவீதத்தை பெண்களுக்கு ஒதுக்க மறுக்கிறது. மாறாக, அவசியமே இல்லாமல், தொகுதி மறுவரையறையையும், பெண்களுக்கு இட ஒதுக்கீட்டையும் இணைத்து, அந்த மசோதா நாடாளுமன்றத்தில் தோற்றுப் போகும் என்று தெரிந்தே அந்த நிலையை உருவாக்கியது. அதன் மூலம் பிஜேபி மட்டுமே பெண்கள் நலன் காக்கும் கட்சி என, தேர்தல் நேரத்தில், தம்பட்டம் அடித்துக் கொள்ள முயற்சித்தது. தமிழ் நாட்டில் பட்டியலின மக்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்திருக்கின்றன, அதைத் தடுத்திடுவோம் என வெறும் பேச்சுக்குக்கூட சொல்லவில்லை. சாதியாதிக்க, ஆணவக் கொலைகள் தமிழ்நாட்டில் நடந்த வண்ணம் இருக்கின்றன. அதைத் தடுத்திட தனிச் சட்டம் இயற்றுவோம் என்று சொல்ல மறுக்கிறது. பள்ளி, கல்லூரிகளிலும் கூட சிசிடிவி கேமராக்கள் அமைக்கும் அதன் திட்டம், காவல்துறை நவீனமயமாக்கம், அதிவிரைவு நீதிமன்றங்கள் போன்றவை அத்தகையதோர் போலீஸ் ஆட்சி எனும் கனவோடு பொருந்திப் போவதாகவே இருக்கின்றன.

பிஜேபியின் தேர்தல் அறிக்கை என்பது தனது ஒற்றை ஆட்சிக் கனவுகளை, பாசிச இந்து ராஷ்ட்ர கனவுகளை, தமிழ்நாட்டை வெறுப்பு அரசியல் நாடாக மாற்றும் கனவுகளைத்தான் - சிலவற்றை வெளிப்படையாகவும், சிலவற்றைக் குறித்து மவுனம் சாதிப்பதன் மூலமும் - முன்வைத்திருக்கிறது. ரூ 2000, ரூ.10,000, கேஸ் சிலிண்டர்கள் போன்ற ஜனரஞ்சகத் திட்டங்களும், அதிமுகவோடு கூட்டணி என்பதும் பிஜேபியின் அத்தகைய கொடூர நோக்கத்தை மறைப்பதற்கான முகமூடிகள்தானே தவிர வேறேதுமில்லை.

பிஜேபியின் தேர்தல் அறிக்கை வெறுமனே தேர்தலுக்கானது மட்டுமல்ல, நாளைய தமிழ்நாட்டை எந்தத் திசையில் கொண்டுபோக விழைகிறது என்பதை சுட்டிக்காட்டும் அதன் தமிழ்நாட்டுக்கான பாசிசக் கனவு அறிக்கை.

... 15ம் பக்கத் தொடர்ச்சி

என்பது இன்று அனைவருக்குமான ஒரு அடிப்படை உரிமையாக இல்லை; திட்டமிட்ட வாக்குரிமைப் பறிப்பிற்கும் முற்றிலும் நிச்சயமற்ற ஒரு வாழ்க்கைக்கும் இலட்சக்கணக்கான மக்கள் ஆளாக்கப்படுகின்றனர். மேலும், சாதி, பாலினம், மதத்தின் அடிப்படையிலான எந்தவொரு பிரிவினைக்கும் பாகுபாட்டிற்கும் இடமளிக்காமல், சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவத்தின் அடிப்படையில் பூலே-அம்பேத்கரால் முன்வைக்கப்பட்ட இந்திய தேசிய அடையாளம், இன்று பார்ப்பனிய இந்து மேலாதிக்கம், கலாச்சாரப் பெரும்பான்மைவாதத்தின் அடிப்படையில் திட்டமிட்டு மறுகட்டமைப்பு செய்யப்பட்டு வருகிறது. பூலேவின் இருநூறாவது பிறந்தநாளையும் மகத் சத்தியாகிரகம், மனுஸ்மிருதி எரிப்பு ஆகியவற்றின் நூற்றாண்டு நிகழ்வுகளையும் கடைப்பிடிக்கும் இத்தருணம், அச்சம், வெறுப்பு, மூடத்தனம் மலிந்த பாசிச ஆட்சிக்கு எதிராக, துணிச்சல், கல்வி, பகுத்தறிவு எனும் பூலே - அம்பேத்கர் மூட்டிய நெருப்பைச் சுடர் விட்டெரியச் செய்வதற்கான ஒரு வாய்ப்பாக அமைய வேண்டும்.

**தமிழாக்கம்: விஜி**





**குறிப்பு: மகத் சத்யாகிரகம்**

பம்பாய் மாநிலம் - இப்போது மகாராட்டிரம் மாநிலம் - ராயகடா மாவட்டத்தின் மகத் நகராட்சி பொதுக் குளத்தில் தீண்டத்தகாதோர்-தலித்துகள்- தண்ணீர் பயன்படுத்த தடை விதிக்கப்பட்டிருந்தது. இதை எதிர்த்து ஆயிரக்கணக்கான தீண்டத்தகாதோருடன் தலைமையேற்று டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் ஊர்வலமாகச் சென்று முதலில் தண்ணீர் அருந்தினார். அதைத் தொடர்ந்து தீண்டத்தகாதோர் அனைவரும் தண்ணீர் அருந்தினர். இந்த நிகழ்வே மகத் சத்யாகிரகம் என்ற வரலாற்று நிகழ்வாக மாறியது. கோபம் கொண்ட சாதி இந்துக்கள் அந்த குளத்தில் மாட்டு சிறுநீர், சாணத்தை தெளித்து தீட்டுக் கழித்தனர். 1937 ல் மும்பை உயர்நீதிமன்றம், தலித்துகள் அந்த பொதுக் குளத்தை பயன்படுத்திக் கொள்ள அனுமதி வழங்கியது.

# ஜோதிபா பூலேவின் இருநூறாவது பிறந்தநாள், மகத் சத்தியாகிரகத்தின் நூற்றாண்டு நினைவேந்தல்! அச்சம், வெறுப்பு, மதவெறி பாசிச ஆட்சிக்கு எதிராக, துணிச்சல், கல்வி, பகுத்தறிவு எனும் பூலே – அம்பேத்கர் மூட்டிய நெருப்பைச் சுடர் விட்டெரியச் செய்வோம்!

– திபங்கர் –

இந்தியாவின் மாபெரும் சமூகப் புரட்சியாளர்களில் ஒருவரான ஜோதிபா பூலேவின் இருநூறாவது பிறந்தநாளுக்கு இன்னும் ஓராண்டே உள்ளது. பல நூற்றாண்டுகளாக அறிவைத் தங்கள் ஏகபோக உரிமையாக்கி, அதிகாரமும் சலுகைகளும் பெற்றவர்களே, பல நூற்றாண்டுகளாக ஆதிக்கம் செலுத்தி வரும் ஒரு சமூகத்தில், சாதியப் படிநிலையையும் ஆணாதிக்கத்தையும் தகர்க்க கல்வியை ஆயுதமாக்கும் ஒரு முன்னெடுப்பைக் கற்பனை செய்து பாருங்கள். பொய்களும் மதவெறியும் கொண்ட மூடத்தன ஆட்சியை எதிர்கொள்ள, உண்மையை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூக அமைப்பிற்கான தொலைநோக்குப் பார்வையை கற்பனை செய்து பாருங்கள். கடனில் தவிக்கும் லட்சக்கணக்கான ஏழை விவசாயிகளின் துயரத்தை முடிவுக்கு கொண்டுவர, மக்கள் நல அரசால் விவசாயிகளின் உரிமைகள் உறுதி செய்யப்பட்ட, அறிவியல் பூர்வமான நவீன வேளாண்மைக்கான ஒரு தேடலை கற்பனை செய்து பாருங்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டு இந்தியா, ஜோதிராவ் பூலேவிடம் இந்தத் தீவிர சிந்தனையின் மலர்ச்சியைக் கண்டது; நிலப்பிரபுத்துவ, காலனித்துவப் பின்னணியில் இது ஒரு சமூகப் புரட்சியின் தொடக்கத்திற்குச் சற்றும் சளைத்ததல்ல.

தனது இருபத்தியொன்றாவது வயதில், ஜோதிராவ் பூலேவும் அவரது மனைவி சாவித்ரிபாயும் நண்பர்களான பாத்திமா, உஸ்மான் ஷேக் ஆகியோரது உதவியுடன் சூத்திர, ஆதிசூத்திர சிறுமிகளுக்கான இந்தியாவின் முதல் பள்ளியை 1848 இல் பூனாவில் நிறுவினர். அதைத் தொடர்ந்து 1851-ஆம் ஆண்டு அனைத்து சாதியைச் சேர்ந்த சிறுமிகளுக்கான மற்றொரு பள்ளியும் 1855-ஆம் ஆண்டு வேலைசெய்யும் மக்களுக்கான ஒரு இரவுப் பள்ளியும் தொடங்கப்பட்டன. இதை சரியான கண்ணோட்டத்தில் பார்த்தோமானால், முதலாளித்துவச் சுரண்டல், காலனி ஆதிக்கக் கொடுமைகள் ஆகியவற்றிலிருந்து விடுதலை பெறுவதற்கான உலகளாவிய எழுச்சிக்கு வித்திட்ட, 'கம்யூனிஸ்ட் அறிக்கை' முதன்முதலில் வெளியான ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க ஆண்டு தான் 1848. அதன் பிறகு சிறிது காலத்திலேயே, 1857-இல், இந்தியாவின் பெரும்பான்மையான பகுதிகள் ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தன; இது இந்தியாவின் முதல் சுதந்திரப் போராக அமைந்தது.

1850-களில் இந்தியாவில் கல்விக்காக நடந்த போராட்டம் என்பது வெறும் எழுத்தறிவின்மைக்கு எதிரானதொரு போர் மட்டுமல்ல. பொதுவாகப் பெண்களும், ஒடுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்த மக்களும் முறையான கல்வி பெறுவதைத் தடை செய்த சமூக அமைப்புக்கு எதிரான ஒரு நேரடி சவாலாக அது அமைந்தது. ஆகவே இதுவொரு சமூக எழுச்சியின் தொடக்கமாகும். அத்தகையதொரு சமூக எழுச்சி இல்லாமல், காலனி ஆதிக்க இந்தியாவில் உண்மையான அரசியல் விழிப்புணர்வு ஏற்பட்டிருக்க முடியாது. அந்தப் பெரும் சமூக எழுச்சியின் தொடக்கமாகவே இந்தப் போராட்டம் விளங்கியது. வங்கத்தில் வித்யாசாகரைப் போலவே, மகாராஷ்டிராவில் பூலேவும் விதவை மறுமணத்திற்கான ஒரு மாபெரும் போராளியாகத் திகழ்ந்தார். விதவைகளுக்கு வலுக்கட்டாயமாக மொட்டையடிக்கப்படும் கொடுமையை எதிர்ப்பதற்காக, முடிதிருத்துவோரின் வேலைநிறுத்தப் போராட்டம் ஒன்றையும் கூட அவர் ஒருங்கிணைத்தார். 'தீண்டத்தகாதவர்கள்' என்று முத்திரை குத்தப்பட்ட மக்கள் குடிநீர் அருந்துவதற்காக, 1868-ஆம் ஆண்டு தமது சொந்த வீட்டில் இருந்த தண்ணீர் தொட்டியை பூலே திறந்துவிட்டார். பொது வளமான நீரின் மீது அனைவருக்குமான சம உரிமையைக் கோரி, அண்ணல் அம்பேத்கர் 'மகத் சத்தியாகிரகத்தை' முன்னெடுப்பதற்கு ஏறக்குறைய அறுபது ஆண்டுகளுக்கு முன்பே இது நிகழ்ந்தது.

இந்தியாவின் சாதிக் கட்டமைப்புக்கு எதிராக 1873-ஆம் ஆண்டு ஜோதிராவ் பூலே தனது மிக முக்கியப் படைப்பான 'குலாம்கிரி' (அடிமைத்தனம்) என்ற நூலை வெளியிட்டார்.

மேலும், அமெரிக்காவில் அடிமைத்தனத்தை ஒழிக்க நடந்த உள்நாட்டுப் போருக்கு அந்தப் புத்தகத்தை அர்ப்பணித்தார். அதே ஆண்டில், அவரும் அவரது மனைவி சாவித்ரிபாய் பூலேவும் இணைந்து, சாதிப் படிநிலைகளைத் தகர்த்தெறியவும் பெண்கள், ஒடுக்கப்பட்ட சாதிகளைச் சேர்ந்த மக்களின் கல்வியை ஊக்குவிக்கவும் உண்மையை தேடுவோர் சங்கம் ('சத்யசோதக் சமாஜ்') என்ற அமைப்பை நிறுவினர். தனது சொந்தக் கருத்துகளுக்காக, பழமைவாதத் தரப்பிலிருந்து வந்த தொடர்ச்சியான தாக்குதல்களை எதிர்கொள்ள வேண்டியிருந்த போதிலும் சமூக களங்கத்திற்கும் அவதூறுகளுக்கும் ஆளான மற்ற அறிஞர்களுக்கும் சீர்திருத்தவாதிகளுக்கும் ஆதரவாகவே எப்போதும் பூலே துணை நின்றார். தாராபாய் ஷிண்டேயின் பெண்ணிய எழுத்துக்களுக்காக அவரைப் பாதுகாப்பதானாலும் சரி, அல்லது கிறிஸ்தவ மதத்திற்கு மாறியதற்காகக் கடும் விமர்சனங்களை சந்தித்த பண்டித ரமாபாய்க்கு ஆதரவளிப்பதானாலும் சரி, அவர் எப்போதும் அவர்களுக்காகவே குரல் கொடுத்தார்.

அம்பேத்கர் சாதியை தேச விரோதமானது என்று அடையாளம் கண்டு சாதி ஒழிப்பிற்கு அழைப்பு விடுப்பதற்குப் பல பத்தாண்டுகளுக்கு முன்பே, "மகாபலி மன்னனின் தேசத்தைச் சேர்ந்த மக்கள் அனைவரும் - அதாவது சூத்திரர்கள், ஆதிசூத்திரர்கள், பில்கள் (பழங்குடியினர்), மீனவர்கள் போன்றோர் உண்மையாகக் கல்வி பெற்று, தங்களுக்குத் தாங்களே சுதந்திரமாக சிந்திக்க முடிகிற வரையிலும், சீராக ஒன்றிணைந்து உணர்வுபூர்வமாக ஒருங்கிணைக்கப்படும் வரையிலும், இங்கு பெயரளவிற்குக் கூட ஒரு 'தேசம்' உருவாக முடியாது" என பூலே உறுதிப்படுத்தினார். நிச்சயமாக, பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பூலேவால் முன்வைக்கப்பட்ட தேசியவாதம் குறித்த இந்தப் பெரும்பான்மை மக்கள் ('பகுஜன்') தொலைநோக்குப் பார்வை, இருபதாம் நூற்றாண்டின் தொடக்க பத்தாண்டுகளில் சாவர்க்கர் போன்றவர்களால் பரப்பப்பட்ட மதம் சார்ந்த இந்துத்துவ தேசியவாதத்திற்கு முற்றிலும் மாறுபட்டதாகும். எனவே, இன்று அதிகாரத்தில் இருக்கும் சாவர்க்கரின் வாரிசுகள், பூலேவை வெறும் ஒரு 'சமூகச் சீர்திருத்தவாதியாக' சுருக்கி, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான ஒரு அடையாளச் சின்னமாக மட்டும் மாற்றி அவரை அபகரிக்கத் துடிப்பதில் ஆச்சரியம் எதுவுமில்லை.

பூலே அமைத்துத் தந்த பாதை, இந்தியாவின் விடுதலைப் பயணத்தை, குறிப்பாகச் சாதிய ஒடுக்குமுறை, மூடத்தன கோட்பாடுகளில் இருந்து விடுதலை பெறும் பாதையைத் தொடர்ந்து ஒளிரச் செய்தது. 1890-ஆம் ஆண்டில் பூலே மறைந்து சரியாக ஓராண்டுக்குப் பிறகு பிறந்த அண்ணல் அம்பேத்கர், சாதிய பாகுபாடு, சமூக அநீதிக்கு எதிரான தனது இடைவிடாத போராட்டத்தின் வாயிலாகவும், பெண்களின் கல்வி, அதிகாரம் பெறுதல் மீதான தனது ஒருமித்த கவனத்தின் மூலமாகவும், பூலேவின் அந்த மரபை தனதாக்கி, தொடர்ந்து முன்னெடுத்துச் சென்றார். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய அடிப்படை விழுமியங்களையும் மனிதநேயம், பகுத்தறிவு எனும் தொலைநோக்குப் பார்வையையும் நிலைநாட்டுவதற்கான தனது இலட்சியப் பயணத்தில் புத்தர், கபீர், பூலே ஆகியோர் தனக்கு ஊக்கமளித்த மூன்று மாபெரும் ஆசான்கள் என அம்பேத்கர் அங்கீகரித்தார். பூலேவின் இருநூறாவது பிறந்தநாள் ஆண்டு, வரலாற்றுச் சிறப்புமிக்க மகத் சத்தியாகிரகம் (20 மார்ச் 1927), சமூக அடிமைத்தனத்தின் சட்டமான மனுஸ்மிருதியை பொதுவெளியில் தீயிட்டு எரித்த நிகழ்வு (25 டிசம்பர் 1927) ஆகியவற்றின் நூற்றாண்டாகவும் அமைவது மிகவும் பொருத்தமானதொரு வரலாற்று நிகழ்வாகும்.

இன்று பூலேவையும் அம்பேத்கரையும் நினைவுகூர்வது, வெறுமனே இந்திய வரலாற்றின் எழுச்சியூட்டும் அத்தியாயங்களை நினைவுகூருவதாக மட்டுமல்ல; இன்றைய இந்தியாவில் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவத்திற்கான போராட்டத்திற்குப் புத்துயிரளிக்க, பூலே - அம்பேத்கர் மரபின் புரட்சிகரமான உணர்வை மீண்டும் சுடர்விட்டெரியச் செய்வதாகும். பூலே, அம்பேத்கரால் பகுத்தறிவு, சமூக மேம்பாட்டிற்கான ஓர் அடிப்படைக் கருவியாகப் பார்க்கப்பட்ட கல்வி, இன்று பணக்காரர்களின், சலுகை பெற்றவர்களின் ஏகபோக உரிமையாக மீண்டும் காலனித்துவப்படுத்தப்பட்டு வருகிறது; அத்துடன், கருத்தியல் மூளைச்சலவை, ஒற்றைக் கலாச்சாரத் திணிப்பு, அரசியல் ஆதிக்கம் ஆகியவற்றுக்கான ஒரு கருவியாகவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. பாகுபாடற்ற கல்வி வளாகங்கள் அமைய வேண்டும் என்ற கோரிக்கையானது, தங்களை நிரந்தரமாகப் பாதிக்கப்பட்டவர்களாகக் காட்டிக்கொள்ளும் மனநிலைக்கு அடிமையாகிவிட்டதாகக் கேலி செய்யப்படுகிறது. இந்தியாவின் விவசாயிகள், உழைக்கும் மக்களின் உரிமைகளையும் நலன்களையும் உறுதி செய்யும் மக்கள்நல அரசு என்ற பூலே - அம்பேத்கரின் தொலைநோக்குப் பார்வை, அனைத்து வளங்களையும் மிகச் சிலரின் கைகளில் மட்டுமே குவிக்கும் ஒரு கார்ப்பரேட் அரசால் காலில் போட்டு நசுக்கப்படுகிறது.

சமத்துவத்தின் அரசமைப்புச் சட்ட அடையாளமாக ஒவ்வொரு குடிமகனுக்கும் உறுதி செய்யப்பட்ட வயதுவந்தோர் வாக்குரிமை

...தொடர்ச்சி 13ம் பக்கம்

# தமிழ்நாடு தேர்தல் களத்தில்:

## பாஜக–அதிமுக–பாமக பாசிச துரோக கூட்டணியை எதிர்த்து, முதன்மையான இடதுசாரி அரசியல் குரலாக ஓங்கி ஒலித்த மார்க்சிஸ்ட்–லெனினிஸ்ட் கட்சி!

முப்பத்தியெட்டு நாட்களுக்கு மேலாக நடைபெற்ற உக்கிரமான தேர்தல் போர் முடிவுக்கு வந்துள்ளது. போரின் முடிவுகளுக்காக இந்தியாவே காத்துக் கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டில் இந்தத் தேர்தல் "வழக்கத்துக்கு மாறான தேர்தலாக" இருந்தது. பாஜக தேர்தலில் போட்டியிடுவதும் மீண்டும் அதிமுகவுடன் கூட்டணி சேர்ந்து போட்டியிடுவதும் புதிதில்லை. ஆனால், 12 ஆண்டுகால போர் உக்கிரம் நிறைந்த ஒன்றிய ஆட்சியின் கீழ், மனம் திருந்திய மைந்தனாக அதிமுக, பாஜக வுடன் கூட்டணி ஏற்படுத்திக் கொண்ட நிலையில், இரட்டை என்ஜின் ஆட்சி; தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி என்ற முழக்கங்கள் முதல் முறையாக ஒலித்தன. இந்த வகையில் இது வழக்கமான தேர்தலாக இல்லை.

இந்த வகையில் பாசிச பாஜக - அதிமுக கூட்டணிக்கும், திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கும் இடையிலான போர்க்களமாக காட்சியளித்தது. சட்டப்பேரவை தேர்தலில், "டெல்லிக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையிலான தேர்தல்" என்று, மிக நீண்ட இடைவேளைக்குப் பிறகு, பிரபலமாக ஒலித்ததும் இதுதான் முதல்முறை. எனவே இது வழக்கமான தேர்தலாக இல்லை. சமூகநீதி, கூட்டாட்சி, மதச்சார்பின்மை கொள்கைகளால் பாஜகவுக்கு கடும் சவாலாக விளங்கும் தமிழ்நாட்டை, தகர்க்கும் மோசடித் திட்டங்களுடன் களத்துக்கு வந்தது பாஜக - அதிமுக கூட்டணி. மறுபுறம், திராவிட மாடல் கூட்டணி. இவற்றுக்கிடையே, கார்ப்பரேட்-காவிப்பாசிச எதிர்ப்பு, சுதந்திரமான இடது அரசியலுடன் மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட் கட்சி தனித்து தேர்தல் களத்தில் முனைப்பாக களமாடியது. அருவமான மாற்றம் தேடும் இளம் தலைமுறையை முதன்மையாக திமுக எதிர்ப்பை நோக்கி திருப்ப முயன்ற தவெக, போலி தமிழ்ப்பெருமிதத்தால் தமிழ்த்தேசியம் பேசிய, தனித்து களம் கண்ட நாதக, உட்கட்சி பிளவால் காயம்பட்ட, வட்டார சமூக அடையாளத்தைக் கொண்ட ராமதாஸ்-சசிகலா கூட்டணி போன்றவை பலதுருவ அரசியல் போல தோன்றினாலும் காத்திரமான பாஜக-அதிமுக-பாமக எதிர்ப்பு 'மக்கள் ஜனநாயக அரசியலை' வெளிப்படுத்தவில்லை. இந்தப் பின்னணியில், சுழன்றடிக்கும் தேர்தல் வாக்குறுதிகள் சுனாமிக்கு மத்தியில் "மக்கள் போராட்ட பிரகடனத்துடனும்" வெப்ப அலையை விஞ்சிய தேர்தல் கூச்சல்களுக்கு மத்தியிலும் தேர்தல் போராட்டத்தை, "பாசிசத்துக்கும் மக்கள் ஜனநாயகத்துக்கும் இடையிலான போராக" முன்னெடுக்கும் முன்களப்பணியாளராக மார்க்சிஸ்ட்- லெனினிஸ்ட் கட்சி 13 தொகுதிகளில் களத்தில் நின்றது. ஈரான் மீதான அமெரிக்க-இஸ்ரேல் அடாவடிப்போரால் இந்திய மக்கள் அவதியுறுவதற்கு ட்ரம்ப் முன்பு மோடி மண்டியிட்டதே காரணமென்று பாஜக -அதிமுக கூட்டணியை மார்க்சிஸ்ட்- லெனினிஸ்ட் கட்சி தோலுரித்துக் காட்டியது.

ஏனைய கூட்டணிகள், கட்சிகள் போல் பணபலம், படைபலம், ஊடக பரபரப்பு செல்வாக்கு இல்லாத போதிலும் தேர்தல் போராட்டத்தில் நாட்டுப்புற, நகர்ப்புற உழைக்கும் பெரும்பான்மை மக்கள், வறிய விவசாயிகள், பெண்கள், மாணவர், இளைஞர்கள், ஒடுக்கப்பட்ட, மிகவும் பிற்பட்ட சமூக மக்கள், மலைவாழ் மக்கள், விளிம்புநிலை பிரிவினரின் கார்ப்பரேட்-காவிப்பாசிச எதிர்ப்பு "மக்கள் ஜனநாயக அரசியலை" மய்யகளத்துக்கு கொண்டுவர ஆனமட்டும் பாடுபட்டது.

**மாலெ போட்டியிட்ட தேர்தல் களத்திலிருந்து சில முக்கிய தெறிப்புகளை வாசகர்களின் கவனத்துக்கு கொண்டு வருகிறது தீப்பொறி ஆசிரியர் குழு.**

இராமநாதபுரம், மேலூர், வேடசந்தூர், புதுக்கோட்டை தொகுதிகள் பெரிதும் ஒரேமாதிரி தன்மை கொண்டவை. வறண்ட பூமி, மானாவாரி விவசாயம், கனிமவளக்கொள்ளை, ஆண், பெண் இளைஞர்களை நகரங்களுக்கு விரட்டும் வேலையின்மை, வாழ்வாதாரத்துக்காக திருப்பூர், கோவை, சென்னை உள்ளிட்ட நகரங்களுக்கு புலம்பெயர்தல், கழுத்தை நெரிக்கும் கந்துவட்டி, வீட்டுமனை, வீடு, திறந்தவெளி கழிப்பிடம், நீர்ப்பாசனம், குடிதண்ணீர் இவை இந்தத் தொகுதிகளின் பொதுவான முக்கிய பிரச்சனைகள். திராவிட மாடல் ஆட்சி முதல், அதற்கு முன் இருந்த எந்த ஆட்சியும் இந்த அடிப்படை பிரச்சனைகளுக்குத் தீர்வு காணவில்லை. மாறாக இந்தப் பிரச்சனைகள் நீடிக்க காரணமானவர்களே தேர்தலுக்கு தேர்தல் இந்தப் பிரச்சனைகளை தீனியாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து பெரிய எண்ணிக்கையில் விலகி சமீபத்தில் மாலெ கட்சியில் சேர்ந்து கட்சி வரைபடத்தில் இடம்பெற்று சில மாதங்களே ஆன **இராமநாதபுரம் தொகுதியில்,** சிபிஐஎம்எல் மாவட்டச் செயலாளர் முருகபூபதி வேட்பாளராக முனைப்புடன்

களமாடினார். இகக வில் பல ஆண்டுகளாக மாவட்டச் செயலாளராக செயல்பட்டதன் மூலம் மாவட்டம் முழுவதும் பரவலாக அறியப்பட்ட தொகுதி வேட்பாளர், முருகபூபதி எதிர்பாராத வகையில் ஆயிரக்கணக்கானவர்கள் கூடிய நிகழ்ச்சியில் அறிமுகம் செய்யப்பட்டார். ஏப்ரல் 4, அன்று இராமநாதபுரத்தில் நடைபெற்ற மாலெ கட்சி வேட்பாளர் அறிமுகக் கூட்டத்திற்கு அனுமதி பெறப்பட்டிருந்தது. அன்றே அதே இடத்தில் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொள்ளும் திமுக நிகழ்ச்சியைக் காண வந்தவர்கள் நமது கூட்ட நிகழ்ச்சியை கலையாமல் நின்று கேட்டனர். வேட்பாளரை அறிமுகப்படுத்தி, பாஜக - அதிமுக கூட்டணியை சாடிப் பேசிய பாலசுந்தரம் உரையை திமுகவினர் சிலர் வெளிப்படையாகவே வரவேற்றனர்.

இராமேஸ்வரம், கீழக்கரை, இராமநாதபுரம் உள்ளிட்ட முக்கிய பகுதிகளை உள்ளடக்கி கிராமங்கள், சிறு நகரங்களில் பரப்புரை மேற்கொள்ளப்பட்டன. மீனவர்கள் பிரச்சினை - கடலட்டை தடை, இலங்கை கடற்படையால் தொடர் தாக்குதல், கைது, வாழ்வாதார பறிப்பு, இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஆகியவற்றை முதன்மைப்படுத்திய நமது பரப்புரை, ஒன்றிய பாஜக-அதிமுக அணியை கடுமையாக அம்பலப்படுத்தியது. தோழர் சிம்சனின் கூர்மையான உரை கடலோடி சமூக மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது. ஏப்ரல் 13 அன்று இராமநாதபுரத்தில் நடைபெற்ற தெருமுனை பரப்புரையில் மாநிலச் செயலாளர் கலந்து கொண்டு பேசினார். ஏப்ரல் 14, அம்பேத்கர் பிறந்த நாளில் தொகுதி முழுவதும் வாகன பரப்புரை நடத்தப்பட்டது. ...அன்று பரப்புரையின் போது நமக்கு அனுமதி அளிக்கப்பட்ட இடத்தில் நமது பரப்புரைக்கு இடையூறு ஏற்படுத்தும் விதமாக பாஜகவினர் இடைநிறுத்தாமல் பாடல், உரை ஒலிபரப்பு செய்தனர். எடுத்துச் சொல்லியும் கேட்காத நிலையில் நமது தோழர்கள் சாலைமறியலில் ஈடுபட்டு பாஜகவினரை அம்பலப்படுத்தினர். நீண்ட தூரத்துக்கு போக்குவரத்து நின்று போன நிலையில் காவல்துறையினர் தலையிட்டு பாஜகவினரை எச்சரித்து கலைத்தனர். அச்சு, மின்னணு ஊடகங்களில் செய்தியானது. வாக்குப் பதிவன்று வேட்பாளர் முருகபூபதியை சந்திக்க நேர்ந்த பாஜக வேட்பாளர் நாகேந்திரன் தனது கட்சியினர் செயலுக்கு வருத்தம் தெரிவித்துக் கொண்டார்.

ஏப்ரல் 18 அன்று இராமேஸ்வரத்தில் நடைபெற்ற இறுதிகட்ட பரப்புரை கூட்டத்தில் அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் வீ. சங்கர் கலந்து கொண்டு பேசினார். இகக, இகக(மா) முன்னோடிகள் பேச்சால் ஈர்க்கப்பட்டனர். கூட்டத்திலேயே நிதியும் அளித்தனர். கடந்தகால ஆட்சிகளில் அரசு மேல்நிலைப்பள்ளி கொண்டு வராதது, நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு கவனம் செலுத்தாதது போன்ற மக்கள் பிரச்சினைகளை வலியுறுத்தப்பட்ட அதேவேளை, தமிழ்நாட்டிற்கு ஆபத்தான பாஜக-அதிமுக கூட்டணி முதன்மையாக எதிர்க்கப்பட்டது.

மாலெ கட்சி முடிவை இடதுசாரி வட்டாரத்தைச் சேர்ந்த பலரும் வரவேற்று பேசினர். இகக (மாலெ) போல் தனித்துப் போட்டியிடுவது, போட்டியிடாத இடங்களில் திமுக கூட்டணிக்கு வாக்களிப்பது என்று மற்ற இரண்டு இடதுசாரிகளும் கூட முடிவு செய்திருக்கலாம் என்று பலரும் கருத்து தெரிவித்தனர்.

அமைப்புக் கட்டமைப்பு இன்னும் முறையாக உருவாகாத நிலையிலும் வெகு சில முன்னணித் தோழர்கள் தீவிரமாக பணியாற்றி குறுகிய காலத்தில் தொகுதி முழுவதும் கட்சியை அறிமுகப்படுத்தியுள்ளது சிறப்பான அனுபவமாகும். தொகுதியில் செய்த வேலை, மாவட்டத்தில் பல இடங்களில் இருந்து இடதுசாரி கட்சிகளிலிருந்து இன்னும் பல முன்னணித் தோழர்கள் வருவதற்கு கதவுகளை அகலத் திறந்துள்ளது.

கார்ப்பரேட் டங்க்ஸ்டன் எதிர்ப்பு மக்கள் இயக்கத்தில் நமது தலையீட்டை ஒட்டி அறிமுகமான **மேலூர் தொகுதியில்** நமது போட்டி, புதிய விசயமாக பார்க்கப்பட்டது. கக்கன் போன்ற காங்கிரஸ் ஆளுமையால் அறியப்பட்ட இந்தப் பகுதியில் காங்கிரஸ், அதிமுக, திமுக என மாறி மாறி களம் கண்ட இந்தத் தொகுதியில் மா லெ கட்சி போட்டியிட்டது புதிய வரவாகவே பேசப்பட்டது. மக்கள் போராட்டத்தால் டங்க்ஸ்டன் திட்டத்தை ஒன்றிய அரசு கைவிட்டாலும் பாஜகவின் கார்ப்பரேட் ஆபத்து முழுவதுமாக கைவிடப்பட்டதாக கருத முடியாது. விழிப்பாக இருக்க வேண்டும். விவசாயிகள் விரோத விதைகள் சட்டம், மின்சார திருத்தச் சட்டம் போன்றவையும், அவற்றை ஆதரித்து பாஜகவுடன் கூட்டணி சேர்ந்துள்ள அதிமுக துரோக கூட்டணியும் தோற்கடிக்கப்பட வேண்டுமென ஏப்ரல் 8 அன்று மேலூரில் நடைபெற்ற வேட்பாளர் அறிமுகக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. கூட்டத்தில் வேட்பாளர் மெய்யருடன் மதிவாணன், மாநிலச் செயலாளர் ஆசைத்தம்பி, பாலசுந்தரம் ஆகியோரும் உரையாற்றினர்.

பிஆர்பி கனிமவளக் கொள்ளையில் அரசுக்கு ரூ 1,76,000 கோடி இழப்பு என அறிவித்துள்ள அய்ஏஎஸ் சகாயம் அறிக்கை வெளியிடவேண்டும், மேலூர் அரசு கல்லூரியை பல்துறை கல்வி வளாகமாக உயர்த்த வேண்டும், அபகரிக்கப்பட்ட பஞ்சமர் நிலங்கள் மீட்கப்பட்டு தலித்துகளுக்கு ஒப்படைக்க வேண்டும் என்பது போன்ற தொகுதிக்கே உரிய முக்கிய கோரிக்கைகளும் விரிவாக எழுப்பப்பட்டது. சென்னையில் 165 நாட்களுக்கு மேல் நடைபெற்று அரசை பணிய வைத்த வெற்றிகரமான தூய்மைப் பணியாளர் போராட்டம்

தமிழ்நாடு தழுவிய போராட்டமாக வளர்ந்துள்ளது. தூய்மைப் பணியாளர், தூய்மைக் காவலர்களின் தலைவர்களாக திருப்பெரும்புதூரில் தமிழரசனும் தூத்துக்குடியில் சகாயமும் போட்டியிடுவதும் வரவேற்கப்பட்டது. தொகுதியிலுள்ள இரண்டு ஒன்றியங்களிலும் வேலையை விரிவுபடுத்தும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. தேர்தல் தயாரிப்பு கூட்டத்தில் கூட்டுத்தொகையாக ரூ 8,500 வசூலானது. தோழர் வீ.சங்கர் கலந்து கொண்ட முன்னணிகள் கூட்டமொன்றும் நடைபெற்றது. தேர்தல் நிதியாக மாநில கட்சிக்கு ரூ 10,000 நிதியும் வழங்கப்பட்டது.

புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி மாலெ கட்சி முதலில் காலூன்றிய பகுதியும் வெகுமக்கள் அரசியல் முன்னணிக்கு வித்தூன்றிய பகுதியும் பச்சைத் துண்டு விவசாயிகள் சங்கம் எழுச்சி பெற்றது **வேடசந்தூர் தொகுதி.** தோழர் இரவி வேட்பாளராக அறிவிக்கப்பட்ட ஏப்ரல் 12 பொதுக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் முருகேசன், மாநிலச் செயலாளர் பழ. ஆசைத்தம்பி, மா க உறுப்பினர் மீனாட்சிசுந்தரம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். விவசாயிகள் போராட்டத்தில் உயிர்நீத்தவர்களுக்கு அஞ்சலி தெரிவித்து கூட்டம் துவங்கியது. விவசாயிகளின் பல பத்தாண்டுகால கோரிக்கையான பாசனத்திட்டங்களை நிறைவேற்றி விவசாயத்துக்கு புத்துயிர் ஊட்டுவதற்கு மாறாக கடந்த கால திராவிட ஆட்சியாளர்கள் தங்கள் சொந்த ஆதாயத்துக்காக குடகனாறு திட்டத்தை மாற்றியமைத்தது ஏன் என கூட்டம் கேள்வி எழுப்பியது. பெரும் சிமெண்ட் ஆலைகளுக்காக குவாரிக் கொள்ளையை திறந்து விட்டது ஏன் என காட்டமாக கேள்வி எழுப்பியது. பெண்கள் முன்னேற்றத்துக்கு பெரும் திட்டங்களை கொண்டு வந்து விட்டதாக சாதனை பேசும் திராவிட மாடல் அரசு, பெண் தொழிலாளரது சமவேலைக்கு சமக் கூலி, வேலை பாதுகாப்பு, மாதவிடாய் விடுப்பு போன்றவற்றை ஏன் கொண்டுவரவில்லை என்றும் பாலசுந்தரம் கேள்வி எழுப்பினார். மா லெ கட்சியின் தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள பெண் தொழிலாளர் கோரிக்கை போல வேறெந்த கட்சியும் முன்வைக்கவில்லை என்பதும் சுட்டிக்காட்டப்பட்டது. தொகுதியில் வீடு, வீட்டுமனை போராட்டங்கள் மூலம் ஏழை மக்கள் பயன்பெற்றதையும் வேட்பாளர் இரவி எடுத்துக் கூறினார். வடமதுரை, குஜிலியம்பாறை, வேடசந்தூர் ஒன்றியங்களில் உள்ள கிராமங்கள், சிறுநகரங்களில் வாகன பரப்புரை, குடியிருப்பு பரப்புரை மேற்கொள்ளப்பட்டது.

**புதுக்கோட்டை தொகுதியில்** இரண்டாவது முறையாக மா லெ கட்சி போட்டியிடுகிறது. ஒரே பெண் வேட்பாளரான தோழர் மணிமேகலையை ஏப்ரல் 16 அன்று புதுக்கோட்டை நகரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கட்சியின் மூத்த தலைவர் தோழர் குமாரசாமி அறிமுகப்படுத்தினார். நிலைக்குழு உறுப்பினர் வீ மூ வளத்தான் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மாநிலச் செயலாளர் பழ. ஆசைத்தம்பி கலந்து கொண்டு பேசினார். மாவட்டச் செயலாளர் சி.ரெங்கசாமி கலந்து கொண்டார்.

இரண்டு அமைச்சர்கள் இருக்கும் இந்த மாவட்டத்தில், தொகுதியின் பின்தங்கிய நிலமை அப்படியே உள்ளது ஏன்? வேங்கை வயல் தண்ணீர் தொட்டியில் மலம் கலந்த இழிவான செயலில், உண்மை குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கு பதில், மலம் கலந்த தண்ணீரைக் குடித்த தலித்துகளையே குற்றவாளிகளாக்கியிருப்பது என்ன வகையான சமூகநீதி? யாருக்கான சமூகநீதி? எனக் கேள்வி எழுப்பப்பட்டது. மூன்று நட்சத்திர கொடிச் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்ற மாலெ கட்சி மக்களவை உறுப்பினர் ராஜாராம் சிங் வேங்கை வயல் தலித்துகளை சந்தித்து, நீதிக்கான அவர்களது போராட்டத்தில் மா லெ கட்சி தொடர்ந்து துணைநிற்கும் என்று உறுதி அளித்ததை கூட்டம் நினைவுபடுத்தியது. வேங்கை வயல் சம்பவம் தொடர்பாக மறுவிசாரணை நடத்தப்பட வேண்டும். உண்மைக் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு கடும் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்ற மா லெ கட்சியின் போராட்ட பிரகடனத்துக்காக தொடர்ந்து போராடுவோம் என்று உறுதி கூறப்பட்டது.

குழாய் தண்ணீர் வழங்காமலே தண்ணீர் வழங்கி விட்டதாகவும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைத்திட்டத்தை ஒழித்துவிட்டு 125 நாள் வேலை வழங்கப் போவதாகவும் வீடு கட்டாமலேயே வீடு வழங்கி விட்டதாகவும் தனிநபர் கழிப்பறைகள் கட்டாமலேயே திறந்தவெளி கழிப்பிடத்தை ஒழித்து விட்டதாகவும் மோசடி அறிக்கை வெளியிடும் பாசிச மோசடி மோடி-எடப்பாடி கூட்டணியை தோற்கடிக்க புதுக்கோட்டை தொகுதியின் முதன்மையான பாஜக -அதிமுக எதிர்ப்பு அரசியல் சக்தி மார்க்சிஸ்ட் -லெனினிஸ்ட் கட்சிக்கே வாக்களிக்க வேண்டுமென்ற செய்தி பெரும் சிரமங்களுக்கிடையே தொகுதி முழுவதும் கொண்டு செல்லப்பட்டது.

**தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் (தனி), பாபநாசம் சட்டமன்றத் தொகுதிகள்.** இரண்டு தொகுதிகளுமே தமிழ்நாட்டின் பாரம்பரிய விவசாயப் பகுதியாகும். கட்சிக்கு நீண்ட பாரம்பரியமிக்க கிராமப்புற வறியவர்கள் மத்தியிலான வேலை கொண்ட சட்டமன்ற தொகுதி திருவிடைமருதூர். தியாகிகள் சந்திரகுமார், சந்திரசேகர் துவங்கி, தோழர் டிகேஎஸ் ஜனார்த்தனன் வரை மக்களோடு மக்களாக நின்று களப்போராட்டங்களை முன்னெடுத்த பகுதி. தேர்தல் போராட்டங்களிலும் தொடர்ந்து பங்கெடுத்து வரும் தொகுதி. மாவட்ட ஊழியர் கூட்டத்தில் தோழர் கண்ணையன் வேட்பாளராக முடிவு செய்யப்பட்டார்.. மாநிலச் செயலாளர் ஆசைத்தம்பி, மாநில நிலை குழு உறுப்பினர்

ஞானதேசிகன், மாநிலக் குழு உறுப்பினர்கள் ராஜசங்கர், தவச்செல்வன், மதியழகன், பிரபு, ஜெசிந்தா, கண்ணையன், மாசிலாமணி ஆகியோருடன் தஞ்சை நகரச் செயலாளர் எஸ். எம் ராஜேந்திரன் உட்பட தோழர்கள் கலந்து கொண்டனர். போராட்ட வழக்குகள் பொய் வழக்குகள் என வேட்பாளர் கண்ணையன் மீது 14 குற்றவியல் வழக்குகள் நிலுவையில் இருந்தன. இந்தத் தொகுதியில் நிலப் போராட்டம், ஆதிக்க சக்திகளுக்கு எதிரான போராட்டம், விவசாய கூலித் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாப்பதற்காக அறுவடை இயந்திரங்களுக்கு எதிரான போராட்டம், 100 நாள் வேலை திட்டத்தை முறையாக அமுல்படுத்துவதற்கு, சட்டக் கூலி பெறுவதற்கான போராட்டம் என நீண்ட போராட்ட வரலாறு கட்சிக்கு உண்டு.

நமது பாரம்பரிய வேலைப்பகுதிகள், தலித் குடியிருப்புகளில் கவனம் செலுத்தி பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. எம் எல் கட்சியின் அரசியல் நிலைப்பாட்டை விளக்கி தோழர் குமாரசாமி, தோழர் ஆசைத்தம்பி கலந்து கொண்ட பொதுக்கூட்டம் ஒன்றும் நடைபெற்றது. மயிலாடுதுறை தோழர்கள் இளங்கோவன், வீரச் செல்வன் உள்ளிட்டோர் தொடர் பிரச்சாரங்களில் ஈடுபட்டனர்.

பாபநாசம் தொகுதி: மாவட்ட ஊழியர் கூட்டத்திலேயே வேட்பாளராக மாவட்டச் செயலாளர் மாசிலாமணி முடிவு செய்யப்பட்டார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து திரளாக தோழர்கள் எம்எல் கட்சியின் இணைந்த தொகுதி இது. வறிய மக்களின் அடிப்படை கோரிக்கையான வீடு, வீட்டுமனை பட்டா, 100 நாள் வேலைத் திட்டம், மயானம், மயானத்துக்கான பாதை, ரேஷன் கடை, சாலையோரக் குடியிருப்புகள் அகற்றப்படுவதற்கு முன் மாற்று இடம் கோரிய போராட்டம், காவல் நிலைய மரணத்திற்கு நீதி கேட்டு போராட்டம் என தொடர் போராட்டங்கள் நடத்தி வெற்றி பெற்ற நிகழ்வுகளும் கொண்ட தொகுதி. அத்தனை போராட்டங்களிலும் தோழர் மாசிலாமணி தலைமையேற்று பங்கேற்றிருக்கிறார்.

இஸ்லாமிய சிறுபான்மை மக்கள் கணிசமாக வாழக்கூடிய தொகுதி. சென்ற முறை மனிதநேய மக்கள் கட்சியின் ஜவகருல்லா வெற்றி பெற்ற தொகுதி. இம்முறை இந்திய யூனியன் முஸ்லிம் லீக்குக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது.த.வெ.க உட்பட அனைத்து கட்சிகளும் முஸ்லிம் வேட்பாளர்களையே நிறுத்தி இருக்கிறார்கள்.

பாபநாசத்தில் நடைபெற்ற தேர்தல் பொதுக்கூட்டத்தில் தோழர் குமாரசாமி தோழர்கள் ஆசைத்தம்பி, ஞானதேசிகன், உரையாற்றினார்கள். தொகுதி முழுவதும் சில நாட்கள் டெம்போ மைக் செட் பிரச்சாரத்தில் தஞ்சை நகர தோழர்களும் திருச்சி நகர தோழர்களும் கலந்து கொண்டனர். மாநில நிலைக்குழு உறுப்பினர் ஜானகிராமன், மாநிலக் குழு உறுப்பினர் ராஜசங்கர் முகாமிட்டு தேர்தல் வேலைகளில் ஈடுபட்டனர்.

கம்யூனிஸ்ட் கட்சியின் இயல்பான அடித்தளமாக விளங்கக்கூடிய உழைக்கும் மக்கள், சிறு, குறு விவசாயிகள், குத்தகை விவசாயிகள் எண்ணிக்கையில் அதிகம் இருக்கும் தொகுதிகளாக இரண்டு தொகுதிகளும் உள்ளன. இரண்டு தொகுதிகளிலுமே நமது பிரச்சாரம் மக்களின் கவனத்தை ஈர்க்கும் வண்ணம் இருந்தது

**ஏற்காடு சட்டமன்ற (எஸ்டி) தொகுதி :** தமிழ்நாட்டில் பழங்குடியினருக்கு என ஒதுக்கப்பட்ட இரண்டு சட்டமன்ற தொகுதிகளில் முதன்மையானது, சேலம் மாவட்டத்தில் உள்ள ஏற்காடு சட்டமன்ற தொகுதியாகும்.. அதிமுக ஆட்சியில், பழங்குடியினருக்கு பல்வேறு துரோகங்கள் இழைக்கப்பட்டிருந்தபோதிலும், ஏற்காடு சட்டமன்ற தொகுதி தொடர்ச்சியாக அதிமுக வின் செல்வாக்கு மிக்க பகுதியாகத் திகழ்கிறது.

1957 ல் இந்த தொகுதி உருவாக்கப்பட்டது. கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கு பழங்குடியினர் மத்தியிலும், பரந்த ஏழை விவசாயிகள் மத்தியிலும் அமைப்பும், அடித்தளமும் இருந்தபோதிலும் கூட, இங்கு இதுவரை கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர்கள் எவரும் போட்டியிட்டது இல்லை. முதன்முறையாக, 2026 தமிழ்நாடு சட்டப் பேரவைத் தேர்தலில், சிபிஐஎம்எல் லிபரேசன் சார்பாக தோழர் சி. கோபி போட்டியிட்டார்.

ஏற்காடு தாலுகா மாரமங்கலம் ஊராட்சி உட்பட பல பழங்குடி ஊராட்சிகளில் பல்லாயிரக்கணக்கான பழங்குடியினரை வீடுவீடாக சென்று சந்தித்தோம். ஏழை விவசாயிகள், தூய்மைப் பணியாளர்கள், பட்டியல் சாதியினர் எனப் பல்வேறு பிரிவினரையும் சந்தித்து ஆதரவு கோரினோம்.

மலைப் பகுதியில், பழங்குடியினர் பாரம்பரிய நில உரிமைக்கு எதிரான அரசாணை ரத்து செய்தல், 5 வது அட்டவணையில் தமிழ்நாடு பழங்குடியினர் பகுதிகள் இணைக்கப்படுதல், நிலம், வீடு, வீட்டுமனை, கடனிலிருந்து விடுதலை தொடர்பான நமது போராட்ட பிரகடனம் வரவேற்பை பெற்றன.

மலைநாடு தேசிய மக்கள் கட்சி, பழங்குடி விவசாய முன்னேற்ற சங்கம் போன்ற பழங்குடியினர் அமைப்புகள் நமது வேட்பாளருக்கு நேரடியான ஆதரவை வழங்கின; பரப்புரை மற்றும் வாக்கு சேகரிப்பிலும் ஈடுபட்டன.

நமது தேர்தல் பரப்புரை (தெருமுனைக் கூட்டங்கள் மற்றும் வாகன பரப்புரைகள்) மிகக்கடுமையாக பாசிச ஆட்சியை, கார்ப்பரேட் ஆதரவு, பழங்குடியினர், விவசாயிகள் விரோத அதிமுக _ பாஜக கூட்டணியின் அரசியலை, அடக்குமுறை ஆட்சிகளை விமர்சனம் செய்வதாக இருந்தது. இதனால், மாரமங்கலம் ஊராட்சி

மற்றும் குறிச்சி தெருமுனைக் கூட்டங்களை நடத்துவதற்கு தொந்தரவுகள் மற்றும் மின்தடைகள் உருவாக்கப்பட்டன.

தோழர்கள் சந்திரமோகன், ஏ.கோவிந்தராஜ், வி. அய்யந்துரை, கதிரவன், டாக்டர் ரவி ஆகியோர் உரைகள் பழங்குடியினர் பிரச்சினைகள், உரிமைகளுக்கானப் போராட்டங்களின் அவசியத்தை வலியுறுத்துவது மற்றும் பாசிச மோடி - எடப்பாடி கூட்டணியை அம்பலப்படுத்துவது ஆகியவற்றை மையமாக கொண்டு இருந்தன.

**வீரபாண்டி தொகுதி:** சேலம் மாவட்டத்தின் 12 சட்டமன்ற தொகுதிகளில், அரசியல் ரீதியான முக்கியத்துவம் வாய்ந்த சட்டமன்ற தொகுதி வீரபாண்டி ஆகும். இத்தொகுதியில் இடதுசாரி கட்சிகளுக்கு ஓரளவு மக்கள் அடித்தளம் உள்ளது. ஒரே ஒருமுறை மட்டும், வீரபாண்டி சட்டமன்ற தொகுதியில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மக்கள் நலக் கூட்டணி வழியாக தனது வேட்பாளரை நிறுத்தியது. சுமார் 8000 வாக்குகளை பெற்றது.

நமது கட்சி வேலைகள் பனமரத்துப்பட்டி ஒன்றியத்தின் கிராமப்புற விவசாயிகள், பழங்குடியினர், பட்டியல் சாதி ஏழைகளை அடிப்படையாக கொண்டதாகும். இந்த ஒன்றியத்தின் முதன்மையான கம்யூனிஸ்ட் கட்சியாக சிபிஐஎம்எல் லிபரேசன் வளர்ந்து வருகிறது. 20 ஆண்டுகளுக்கு முன்னர், அரசு கையகப்படுத்திய தங்கள் பாரம்பரிய சாகுபடி நிலங்களை மீட்பதற்கான ஏழை விவசாயிகளின் விடாப்பிடியான போராட்டத்தின் தொடர்ச்சியாக, மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சியின் சார்பாக, தோழர். P. அன்பு @ அன்பழகன் வேட்பாளராக போட்டியிட்டார்.

பனமரத்துப்பட்டி ஒன்றியத்தில் உள்ள, கெஜல்நாயக்கன்பட்டி, நிலவாரப்பட்டி, நாழிக்கல்பட்டி, குரால்நத்தம் ஊராட்சிகள் மற்றும் எருமாபாளையம் பேரூராட்சியில் 10,000 ற்கும் கூடுதலான மக்களை வீடுவீடாக சென்று சந்தித்துள்ளோம். ஏழை விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், கட்டுமானத் தொழிலாளர்கள் உள்ளிட்ட பல்வேறு பிரிவினரையும் சந்தித்துள்ளோம்.

வீரபாண்டி சட்டமன்ற தொகுதி போராட்ட பிரகடனம் குறிப்பாக அத்திப்பட்டி, சூரியூர், முத்தானூர் பழங்குடியினர் மற்றும் ஏழை விவசாயிகளின் பாரம்பரிய நில உரிமை, கிராமப்புற வேலைத் திட்டத்தில் 200 நாள் வேலை - 700 தினக்கூலி மற்றும் வீடு, வீட்டுமனை, நிலம் மீதான உரிமைகள், கடனிலிருந்து விடுதலை தொடர்பான நமது வாக்குறுதிகள் வரவேற்பை பெற்றன.

எஸ்யூசிஐ (சி), ஆர்எஸ்பி உள்ளிட்ட ஒரு சில இடதுசாரி அமைப்புகள் தங்களுடைய ஆதரவை நமக்கு வழங்கின. தலைமை தோழர்கள் சந்திரமோகன், R.வேல்முருகன், திருப்பூர் முத்து, தருமபுரி முருகன், கே.கோவிந்தராஜ் ஆகியோர் பரப்புரைகள், பாசிச மோடி ஆட்சியை அம்பலப்படுத்தியதுடன், நிலம், வீடு, வேலை கூலி, பழங்குடியினர் உரிமைகளுக்கானப் போராட்டக் குரல், கோரிக்கைகள் சட்டமன்றத்தில் ஒலிக்கப்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்துவதாகவும் இருந்தன.

**சிவகாசி தொகுதி** வேட்பு மனு தாக்கல் துவங்கிய உடனேயே, முதலாவதாக, சிபிஐஎம்எல் கட்சி வேட்பாளர் டிமிட்ரோவ் மனு தாக்கல் செய்தது அனைத்து பத்திரிகைகளிலும் இடம்பெற்றது.

பட்டாசு, பீடித் தொழிலாளர் போராட்டங்களின் தொடர்ச்சியாக, அவர்களது உரிமைக் குரலை எழுப்பும் விதத்தில் சிவகாசி தொகுதியில் நமது தேர்தல் பங்கேற்பு இருந்தது. இந்தத் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர் பாதுகாப்பு, விபத்து தடுப்பு, குறைந்தபட்ச ஊதியம், இஎஸ்ஐ, பிஎஃப் உள்ளிட்ட சமூக பாதுகாப்பு, தொழிலாளர் குடியிருக்க வீடு, வீட்டு மனை உள்ளிட்ட கோரிக்கைகள் நமது பரப்புரையின் மையமாக இருந்தன.

பல குழுக்களாக, வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டதுடன், வேட்பாளரும் தொடர்ச்சியாக வீடு வீடாகவும், வாகனங்களில் சென்றும் வாக்கு சேகரித்தார். சிவகாசி மாநகராட்சியின் 45 வார்டுகள், சிவகாசி ஒன்றியம் உட்பட தொகுதி முழுவதும் பரப்புரை மேற்கொள்ளப்பட்டது. ஏப்ரல் 12 அன்று மாலை பொதுக் கூட்டம் நடைபெற்றது. எம்எல் கட்சியின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் தோழர் வீ.சங்கர், மத்தியக்குழு உறுப்பினர் தோழர் சோ.பாலசுப்பிரமணியன், மாநில நிலைக்குழு உறுப்பினர் த.சங்கரபாண்டியன் உரையாற்றினர்.

இடதுசாரிகள் மற்றும் கடந்த காலங்களில் வீடு, வீட்டு மனைக்கான போராட்டங்களில், தொழிலாளர் அரங்க வேலைகளில் பங்கெடுத்த வர்கள் பரப்புரையின் போது அவர்களாகவே வந்து தங்கள் ஆதரவைத் தெரிவித்தார்கள்.

விருதுநகர் காட்டன்பட்டி பட்டாசு ஆலை விபத்தில் 25 பேர் இறந்து போனார்கள். அதையே தேர்தல் பரப்புரையாக மாற்றிட முயற்சிக்கப்பட்டது. பட்டாசு விபத்து நடந்த பகுதிக்கு சென்று பார்த்ததுடன், அந்த விபத்திற்குக் காரணமானவர்களை கண்டித்தும், தொழிலாளர் மரணத்திற்கு காரணமான லாபவெறி பிடித்த பாட்டாசு முதலாளிகள், துணைபோகும் ஒன்றிய, மாநில அரசுகளையும் மாவட்ட, ஆட்சியர் மற்றும் மாவட்ட பட்டாசு கட்டுபாட்டு அதிகாரிகளை பொறுப்பாக்கிட வேண்டுமென வலியுறுத்தியும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அதில், விருதுநகர் பட்டாசு தயாரிப்பில் உயிரிழந்தோர் குடும்பத்துக்கு ஒரு கோடி, காயமடைந்தோருக்கு 50 லட்சம் நஷ்ட ஈடாக வழங்கிட வேண்டும்; பட்டாசு தொழில் நடத்த

போதிய பாதுகாப்பு உடைய, பட்டாசு தயாரிப்பு வளாகங்களை அரசே உருவாக்கி, ஏற்று நடத்திட வேண்டும்; பாதுகாப்பான பட்டாசு தயாரிப்பு உள்கட்டுமானத்திற்கு, தொழிலாளர் பாதுகாப்புக்கு அரசே பொறுப்பேற்றிட வேண்டும்; கெமிக்கல் கலவைப் பணியை நவீனப்படுத்திட வேண்டும்; மனிதர்களுக்குப் பதிலாக அத்தகைய பணிகளுக்கு எந்திரங்களை பயன்படுத்திட வேண்டும்; 23 பேருக்கும் மேல் இறந்து போன மாபெரும் துயரத்தின் பின்னணியில், விருதுநகர் மாவட்ட தேர்தல்களை தள்ளி வைத்திட வேண்டும் என கோரப்பட்டது.

**போடிநாயக்கனூர் தொகுதி**யில் சிபிஐ(எம்-எல்) லிபரேசன் முதன்முறையாக தேர்தல் களம் கண்டது; வேட்பாளர் முனைவர் சுப.பாண்டிக்குமார். தேர்தல் வரலாற்றில் ஓர் இடதுசாரிக் கட்சி இந்தத் தொகுதியில் போட்டியிடுவது இது இரண்டாவது முறை; இதற்கு முன் சிபிஐ(எம்) ஒரு முறை போட்டியிட்டுள்ளது.

அடையாளபூர்வ, பொய்யான, வெற்று தேர்தல் வாக்குறுதிகளோடும் பணபலத்தோடும் மற்ற கட்சிகள் மக்களை அணுகியபோது சிபிஐ(எம்-எல்) போடிநாயக்கனூர் தொகுதி மக்களின் நீண்ட காலமாக நிறைவேற்றப்படாத, உயிராதாரமான கோரிக்கைகளின் மக்கள் போராட்டப் பிரகடனத்துடன் மக்களைச் சந்தித்தது. ஊராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும், போடி நகரிலும் வீடு வீடாகவும், வாகனத்திலும் பரப்புரை மேற்கொள்ளப்பட்டது. பரப்புரையின்போது மாற்றுக் கட்சியினரால் சில இடையூறுகளும் ஏற்பட்டன. பரப்புரையின் கடைசி நாளில் செய்தித்தாள் வழியாக துண்டறிக்கைகள் விநியோகிக்கப்பட்டன. ஓர் ஆட்டோவும் ஒரு டெம்போவும் எழுச்சிமிக்க பாடல்களுடன் பரப்புரைக்குப் பயன்படுத்தப்பட்டன. கோவை யிலிருந்து தோழர்கள் பெரோஸ்பாபு, சண்முகம், ஜான், நவாஸ், மெஜோ 4 நாள்களும். மாநில நிலைக்குழு உறுப்பினர் தோழர் பாலசுப்பிரமணியன், மாநிலக்குழு உறுப்பினர் பிலோமினா 10 நாள்களும் தங்கி இருந்து பரப்புரையில் ஈடுபட்டனர்.

போடியில், ஏப்ரல் 14, அன்று வேட்பாளர் தோழர் சுப.பாண்டிக்குமாரை அறிமுகப்படுத்தும் பொதுக்கூட்டம் சிபிஐ. (எம்-எல்) ஒன்றிய செயலாளர் தோழர் சிவக்குமார் தலைமையில், மாவட்டக்குழு தோழர்கள் கென்னடி, ஈஸ்வரன், கோவிந்தராஜ், உதுமான், அழகுமலை, சுருளி, விஜய் முன்னிலையில் நடைபெற்றது. மத்திய குழு தோழர் சந்திரமோகன், மாநிலக் குழு தோழர்கள் இராமச்சந்திரன், இளையராஜா உள்ளிட்டோர் உரையாற்றினர். தோழர் சிவராமன் நன்றி கூறினார்; ஏப்ரல் 19 அன்று, இரு சக்கர வாகன, ஆட்டோ ஊர்வலம் நடைபெற்றது. கிராமப்புரத்தில் பரப்புரைக்குச் சென்றபோது, பொதுக்கூட்டம், வாகன ஊர்வலம் பற்றி சிலர் பேசியது, நகர்ப்புரத்தில் மட்டுமல்ல, நகரத்திற்கு வந்து செல்வோரின் கவனத்தையும் ஈர்த்திருக்கிறது என்பதை அறிய முடிந்தது. நமது பரப்புரை மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சியையும் மய்யமாகக் கொண்டிருந்தது. கட்சித் தோழர்களுடன் வேட்பாளர் பாண்டிக்குமாரின் நண்பர்களும் பரப்புரையில் கலந்து கொண்டனர். கிராமப்புரங்களில் புதிய அறிமுகங்கள், கட்சி விரிவாக்கத்திற்கான வாய்ப்புகள் வந்திருக்கின்றன.

**குளச்சல் தொகுதி**யில் தேர்தல் தேதி அறிவிப்பு வருவதற்கு முன்பே வேலைகள் தொடங்கப்பட்டுவிட்டன. குளச்சல் சட்டமன்றத் தொகுதி மக்களின் பிரச்சனைகள் மீது பரப்புரை நடைபயணம், ஆர்ப்பாட்டம் என தேர்தல் போருக்குத் தயாராகிவிட்டனர். தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டவுடன் தோழர் எஸ். எம்.அந்தோணிமுத்து வேட்பாளராக குமரி மாவட்டக்குழுவால் தேர்வு செய்யப்பட்டார். மார்ச் 23, பகத்சிங் நினைவு நாள் அன்று முதல் தேர்தல் பரப்புரை தொடங்கியது. அதிகமான பெண் தோழர்களை மாவட்டக் குழு என்பதால், தேர்தல் பரப்புரையிலும் கணிசமான அளவுக்கு பெண் தோழர்கள் கலந்து கொண்டனர். மீனவர்கள் பிரச்சினை, கனிம வளக் கொள்ளை, அதானிக்கு குமரிக் கடற்கரையைத் தாரை வார்க்கும் மோடி அரசின் திட்டத்திற்கு எதிராக பரப்புரையில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது. அதிமுக கூட்டணியில் குளச்சல் தொகுதி பாஜகவுக்கு ஒதுக்கப்பட்டது. அதனால், தனித்துப் போட்டியிடும் கம்யூனிஸ்ட் கட்சி என்கிற அடிப்படையில் நம் எம்எல் கட்சியின் பரப்புரை மக்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றது. ஏப்ரல் 14 அன்று நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கு கட்சியின் குமரி மாவட்டச் செயலாளர் தோழர் சுசீலா தலைமை தாங்கினார். மாநிலக்குழு உறுப்பினர் தோழர் கார்மல் உட்பட பலர் பரப்புரைகளில் கலந்து கொண்டு மூன்று நட்சத்திரக் கொடிச் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர்.

**தூத்துக்குடி தொகுதி**யின் இகக(மாலெ) வேட்பாளர் தோழர் த.சகாயம். கன்டைனர் லாரி ஓட்டும் தொழிலாளி. தூத்துக்குடியை நாசப்படுத்திய ஸ்டெர்லைட்டிற்கு எதிரான போராட்டத்தில் முன்நின்றவர். தூத்துக்குடி மாநகராட்சி தூய்மைப் பணியாளர்கள் அவர்லேண்ட் என்கிற தனியார் நிறுவனத்தால் சுரண்டப்பட்டு வருகிற நிலையில் அந்த தொழிலாளர்களின் சங்கம் தோழர் சகாயத்தின் முயற்சியால் ஏஐசிசிடியுவுடன் இணைக்கப்பட்டது. இகக(மாலெ)யின் 12ஆவது மாநில மாநாடு தூத்துக்குடியில் சமீபத்தில் நடைபெற்றபோது, மாநாட்டு பரப்புரையிலும் நிதி வசூலிலும் முன்நின்று செயல்பட்ட பெண் தூய்மைப் பணியாளர்கள், சட்டமன்றத் தேர்தலில் தோழர் சகாயத்திற்காக வாக்குகள் சேகரித்தார்கள். தங்களுடைய வீடும் வாக்குரிமையும் பக்கத்து

தொகுதியான ஓட்டப்பிடாரம் தொகுதியில் இருந்த போதும், அதிகாலை 4 மணிக்கே எழுந்து 6 மணிக்கு தங்கள் தூய்மைப் பணியைத் தொடங்கி மதியம் 2 மணி வரை ஓடிக் கொண்டே இருக்கும் அவர்கள், மதிய உணவை முடித்துவிட்டு, தங்கள் வீட்டிற்குச் சென்றுவிட்டால் திரும்ப வரமுடியாது என்பதால், மாலை 3.30 – 4 மணிக்கு தாங்கள் தூய்மைப் பணி செய்யும் பகுதியில் மூன்று நட்சத்திரக் கொடிச் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்கள். மதிய வேளையில், சுட்டெரிக்கும் வெயிலில், வீடு வீடாகச் சென்று, ‘அம்மா, அக்கா கொஞ்சம் வெளியே வாங்க, வேட்பாளர் வந்திருக்கார், எங்க தலைவர் வந்திருக்கார், மூன்று நட்சத்திரக் கொடிச் சின்னத்திற்கு ஓட்டுப் போடுங்க’, ‘அக்கா என்ன பார்க்குறீங்க, அடையாளம் தெரியலையா? யுனிபாரத்தில வந்தா தெரியும், காலைல குப்பை எடுக்க வந்தம்லா, இப்ப எங்க தலைவருக்கு ஓட்டு கேட்டு வந்திருக்கோம், ‘எங்களுக்கு சம்பளம் உயர்த்தி வாங்கிக் கொடுத்தார், போனஸ் வாங்கிக் கொடுத்தார், உங்க பிரச்சனைக்காகவும் போராடி செய்து கொடுப்பார் , எங்க தலைவர் சகாயத்திற்கு மூன்று நட்சத்திரக் கொடிச் சின்னத்தில மறக்காம ஓட்டு போட்டுருங்க,‘ மத்தவங்க அவங்க குடும்பத்ததான் வளப்பாங்க, எங்க தலைவர் உங்களுக்காக இருப்பாரு’ என்று எந்தவொரு தயக்கமும் இல்லாமல், நாள் முழுவதும் தொடர்ந்து நின்று கொண்டே பணி செய்த தால் ஏற்பட்ட தங்களின் உடல் வலியையும் தாங்கிக் கொண்டு வாக்கு சேகரித்தார்கள். தேர்தல் அன்று கூட தோழர்கள் பொன்ராஜ், பாலமுருகப் பெருமாள், கற்பகம் உள்ளிட்டோர் வாக்குச் சாவடிக்கு செல்வபவர்களிடம் வாக்கு சேகரித்தனர். கடுமையான நிதி நெருக்கடியில்தான் தேர்தலைச் சந்தித்துள்ளார்கள். தேர்தல் பணிக் குழு தலைவரான மாநிலக்குழு உறுப்பினர் தோழர் எம்.சுந்தர்ராஜ் நெல்லையிலிருந்து தூத்துக்குடி சென்று தேர்தல் பணியைச் செய்தார்.தூய்மைப் பணியாளர் மற்றும் ஓட்டுநர்களுக்கு குறைந்த பட்ச ஊதியம் வழங்கக் கோரி சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் போடப்பட்டுள்ள வழக்கின் சாதமான நிலை பற்றி தொழிலாளர்கள் மத்தியில் நாள்தோறும் அதிகாலை ஆறு மணிக்கே டிவிசன்களுக்குச் சென்று எடுத்துக் கூறப்பட்டது. ஸ்டெர்லைட் போராளிகளை சுட்டுக் கொன்ற காவல் துறை அதிகாரிகளுக்கு நீதிபதி அருணா ஜெகதீசன் ஆணையத்தின் பரிந்துரைப் படி தண்டனை வழங்க வேண்டும் என்று எம்எல் கட்சி மட்டுமே பரப்புரை செய்தது, ஆட்டோவில் மூலம் செய்யப்பட்ட ஒலிபரப்பு பரவலாகச் சென்றது. ஏப்ரல் 15 அன்று தூத்துக்குடி மாவட்டச் செயலாளர் தோழர் எம்.முருகன் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கட்சியின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் தோழர் வீ.சங்கர், கட்சியின் மாநில நிலைக்குழு உறுப்பினரும் ஏஐசிசிடியு ஆலோசகருமான தோழர் எஸ்.குமாரசாமி, மாலெ தீப்பொறி ஆசிரியர் ஜி.ரமேஷ் உரையாற்றினர். திருநெல்வேலி மாவட்டச் செயலாளர் கணேசன், தென்காசி மாவட்டச் செயலாளர் வேல்முருகன், திருநெல்வேலி மாவட்டக்குழு உறுப்பினர்கள் சண்முகம், செய்யதலி பாத்திமா, துர்கை முத்து, தூத்துக்குடி மாவட்டக் குழு உறுப்பினர்கள் சிவராமன், சண்முகப் பெருமாள், ராமர், தூய்மைப் பணியாளர் சங்க முன்னணித் தோழர்கள் லட்சுமி, வெங்கடேஷ்வரி, அமுதவல்லி பரப்புரையில் முக்கிய பங்காற்றினர். ஏப்ரல் 21 அன்று இறுதி நாள் தொகுதியின் முக்கிய இடங்களுக்கு வாகனத்தில் வேட்பாளருடன் சென்று பரப்புரை மேற்கொள்ளப்பட்டது.

**திருபெரும்புதூர் தொகுதி**யின் இகக(மாலெ) வேட்பாளர் தோழர் தமிழரசன். தொழிலாளர் உரிமைக்கான போராட்டத்தில் முன்னணியில் நின்றதால், பன்னாட்டு நிறுவனமான மதர்சன் ஆலை நிர்வாகத்தால் பழி வாங்கப்பட்ட தொழிலாளி. தான் பழிவாங்கப்பட்ட போதும் தொடர்ந்து தொழிலாளர் உரிமைக்காகப் போராடி வருபவர் தோழர் தமிழரசன். திருபெரும்புதூர் தொகுதி தொழிற்சாலைகள் நிறைந்த தொகுதி மட்டுமல்ல. பெரும் பகாசுர நிறுவனங்களால் ஒட்டச் சுரண்டப்படும் உழைக்கும் மக்கள் வாழ்கின்ற தொகுதி. தேர்தல் அறிவிக்கப்பட்ட உடன் ஒருமைப்பாடு மன்றத் தோழர்கள் மக்கள் மாமன்றத்தில் ஒன்று கூடினார்கள். தோழர் தமிழரசனை வேட்பாளர்களாகத் தேர்ந்தெடுத்தனர். பன்னாட்டு, உள்நாட்டு ஆலைப் பாட்டாளிகள் களமிறங்கினார்கள். நிதி வசூல், பரப்புரை என சுற்றிச் சுழன்றார்கள். சென்னை தூய்மைப் பணியாளர் போராட்டத்திற்கு பல்வேறு வகைகளிலும் ஆதரவுக் கரம் நீட்டிய அந்த ஆலைத் தொழிலாளர்கள், தொழிலாளர் வர்க்கத்தின் அறுதியிடலை உறுதி செய்வதற்காக தேர்தல் போர்க்களம் கண்டார்கள். இகக(மாலெ) நிலைக்குழு உறுப்பினரும் ஏஐசிசிடியு ஆலோசகருமான தோழர் எஸ்.குமாரசாமி வழிகாட்டுதலில் பரப்புரைப் பயணம் தொடங்கியது. ஆட்டோ பிரசாரம், வாகனப் பிரச்சாரம், தெரு முனைக் கூட்டங்கள் நடைபெற்றன. தொழிலாளத் தோழர்கள் வேட்பாளரை அழைத்துக் கொண்டு வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரித்தார்கள். கட்சியின் மாநில நிலைக்குழு உறுப்பினர்கள் இரணியப்பன், புவனா, மாநிலக் குழு உறுப்பினர்கள் ராஜகுரு, ராஜேஷ், ஏஐசிசிடியு தலைவர்கள் பாரதி, அதியமான், மோகன், முனுசாமி, கோபால், தூய்மைப் பணியாளர் தோழர்கள் உள்பட நூற்றுக்கணக்கான தோழர்கள் பரப்புரை பயணத்தில் பங்கெடுத்தனர். கடைசிக்கட்ட பரப்புரையில் இரு சக்கர வாகன ஊர்வலம் நடத்தப்பட்டது. ஏப்ரல் 18 அன்று பொதுக் கூட்டம் நடைபெற்றது. பொதுக் கூட்டத்தில் தோழர் எஸ்.குமாரசாமி சிறப்புரையாற்றினர்.

# தேர்தல் பரப்புரையில் மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட் கட்சி










**MALAE THEEPORI. Registered with Registrar of NewsPaper for India TN/TAM/2002/12013**
**Posted at Egmore RMS/1 Published on 1st and 16th of every month R.DIS: 2804/17**









Owned and **Published** by **S.Balasundaram** from 1/10, 11th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by **Chennai Offset Printers,** 19/1,21/2, KitabathKhan Bahadur street, Ellis Rd, **Chennai** - 600002. **Editor G.Ramesh**